வைத்திய நூல்

அட்டவணை.

3/6

115

310

310

வைத்திய நூல்.

அட்டவணை

எழுதப்பட்டது:- தெய்வசிகாமணி பண்டாரம்.

சுரத்துக்கு மருந்து, குளிகை ஊது காமாலை இவைகளுக்கு மருந்து
வரட்சி கரப்பானுக்கு
பித்தக் காமாலை பாண்டு ரோகத்திற்கு
கவிசை காமாலைக்கு
சேத்தும சுர நிதானம்
திப்பிலி ரசாயனம்
சுரத்தின் பேரில் அதிசாரம், சன்னி சுரம்.
இரத்தக் கடுப்பு கிராணிக்கும்
சகல கழிச்சல் வயிற்றுக் கடுப்பு வயிற்றெடுப்புக்கு
வெள்ளெடுப்புக் கழிச்சல், சலக் கழிச்சல், இருமல் ஈளைஇருமல் இவைகட்கு
வாலை சஞ்சீவி மாத்திரை, சகல மாந்தங்களுக்கும்

ஆசிரிய விருத்தம்.

சேத்தும இருமலுக்கு மருந்து (வெண்பா)
குனியத்துக்கு மருந்து
மரணவசி மருந்து
அண்டம் வீங்கினால் சுரண்ட வீக்கத்திற்கு வாய்வு குன்மத்திற்கு
குன்மம் எரி குன்மம் சுத்தி குன்மம்
சத்தி விக்கல் வாய்வு குன்மம் பொருமல் உஷ்ணம்
நெஞ்சில் வயிற்றில் சீய் கட்டினால்
இரத்த வெட்டை, பித்த வெட்டை, வெட்டை ஈரல் நோய், நெஞ்சிற் கீழ்
குடலேற்றும் ஈரல் பிடிப்பு வயிற்று வலி, உதிரம் விழுதற்கும் பெரும் பாட்டிற்கும்
நீரழிவிற்கு கவிசை குடுகுடுப்பான் குதி வாதம்
நீர் பாட்டுக்கு
எண்ணெய் நசியம் முக சன்னி பற்சன்னி சன்னி சுரம் தனிக் குளிருக்கு
குளிருக்கு வெறுப்புக்கு காமாலைக்கு வெள்ளெழுத்து மாலைக் கண் கண்ணெய்
கண் புழு வெட்டுக்கு
மூக்கில் ரத்தம் விழுந்தால் பற் புழுவுக்கும் நரம்பு சகிலந்தி தலைப் புழு வெட்டு
விரோசனம்
மாறலுக்கும்
மூன்றும் மாறலுக்கு
சிறுநீர் சிறுத்து விழுதற்கும் புதர் கழலை குடல் வாதம் முழங்கால் வாதம்
அற்ப வாதம், மடிவாதம், வரம்பிர வலிப்புக்கும்.
கொடிப்பவுத்திரம், ஆசனப் பவுத்திரம், பவுத்திரம்
புண்ணுக்குக் கட்ட மருந்து
விக்கலுக்கு மருந்து

சு.ச: 30.1.63.

எச்.எம்.

19.1.63.

அட்டவணை.

நோய்களும் சிகிச்சைகளும். நெ.8.

எழுதியவர்:- தெய்வசிகாமணி பண்டாரம்.

சுரத்துக்கு மருந்து.

வேப்பங் கொழுந்து மிளகு, வெள்ளைப் பூண்டு இது மூன்றும் அரைத்து இள வென்னீரில் குடிக்கச் சுரந் தீரும்.

சுரத்துக்குக் குளிகை:-

தருசு விராகனெடை, நேர்வாளம் விராகனெடை இந்த இரண்டு விராகனெடையும் பசுவின் பால் விட்டரைத்து குண்டு மணிப் பிரமாணம் உருண்டை பண்ணி மோரை முறித்து ஒரு உருண்டையை மோரில் கொடுக்கச் சுரந் தீரும்.

மாட்டுப் புளிச் சாணைக் கொண்டு வந்து துவைத்து மோரில் பிளிந்து மூன்று நாள் கொடுக்கவும். எந்த மோராகிலும் கொடுக்கலாம். இது கை கண்டது.

ஊது காமாலைக்கு மருந்து:-

ஊரு சுத்தி பச்சையைக் கொண்டு வந்து கால் படி சாறு பிளிந்து எருமைத் தயிரில் திப்பிலி, மிளகு பொடி செய்து அதிலே தூவி குழப்பி மூன்று நாள் கொள்ளவும்.

அரப்பொடி முருக்கிலையும் ஒரு கட்டைப் பூண்டும், வசம்பு, திப்பிலி கூட அரைத்து வெண்ணெயில் பிசறித் தின்னவும். தினம் ஒரு பாக்களவு தின்னவும். ஊது காமாலை தீரும்.

முருக்கிலையை வாய் பேசாமல் கொண்டு வந்து அரைத்து எருமைத் தயிரில் வடி கட்டி அந்த எருமைத் தயிரை எடுத்து நடுவே இந்த மருந்தை வைத்து உருட்டி எலுமிச்சங் காய் பிரமாணம் மூன்று நாள் கொள்ளவும். இதற்குப் பத்தியம் பச்சரிசிச் சோறும், பசுவின் பால் ஆகும். எல்லா காமாலையும் தீரும்.

வரட்சிக் கரப்பானுக்கு:-

பர பரத்து ஊரும், சொரிய வேண்டி இருக்கும். உடம்பு வீங்கும். எங்கும் பரந்தேரும். சாம்பல் போலே பொருக்கெடும். மேலெங்கும் சரீரம் புலால் நாறும். இதற்கு எண்ணை தண்ணி மிட்டான் கிழங்கு சாறும் படி.க, கற்றாளஞ் சாறு படி.1, தூதுவளைவேர் பலம் 4 நறுக்கிக் கட்டப் போட்டு இரண்டு நாள் ஊற விட்டு ஐந்து இரண்டாய்க் காய்ச்சி வடித்து நல்லெண்ணை ஒன்றரைப் படி விட்டு அதிலே அரிய சிவதை கொடிவேலி வேர் கருஞ்சீரகம் நிலவேம்பு வகை ஒன்றுக்கு இரு களஞ்சு பசுவின் பாலில் அரைத்துக் கூட விட்டுக் காய்ச்சி மிளகு பதத்தில் வடித்து மேலுக்குப் பூசித் தலைக்கு மிட்டு முழுகவும். வறட்சிக் கரப்பான் தீரும். இப்படிப் பதினைந்து நாள் முழுகப் போகும். கால், தலை, சரீரமெல்லாம் பெருஞ் சிரங்கு முண்டாம். காது, நாசி பிடறு கரகரப்பு உண்டாம். இதற்கு எண்ணை புங்கன் கொட்டை, பசு மஞ்சள், வெள்ளைப் பாஷாணம் காடிக் கரிப் பட்டை வகைக்கு மூன்று களஞ்சு நீலியிலைச் சாறு படி அரை நல்லெண்ணை படி கூட்டி எரித்து மெழுகு பதத்தில் வடித்து மேலே பூசவும்.

பித்த காமாலை பாண்டு ரோகத்துக்கு உள்ளுக்கு மருந்து:-

தூதுவளை வேர் ஒரிலைத் தாமரை வேர், கார்போக அரிசி, கருஞ்சீரகம்

வைத்து மூன்று களஞ்சி கூட்டிப் பசுவின் பாலில் அரைத்து நல்லெண்ணை படி.இ யில் வேக வைத்து தினம் ஒரு கரண்டி கொள்ளத் தீரும்.

இதற்கு மருந்து நிலப்பனைக் கிழங்குச் சாறு, நீர்வள்ளிக் கழங்குச் சாறு, எருக்கிலை வேர்ப் பட்டைச் சாறு, தூதுவளச்சாறு, முருங்கை வேர்ச் சாறு, வெள்ளரிக் காய்ச் சாறு, சித்தாமுட்டிச் சாறு, கீழாநெல்லிச் சாறு, சிறுகீரைச் சாறு, நற்பாலை வேர்ச் சாறு வாழைத் தண்டுச் சாறு, கருப்பன் சாறு இஞ்சிச் சாறு வகை ஒன்றுக்கு சா படி.இ, வனமூலிகை பூனைக் கால் வேர் விராகனெடை, கடைச் சரக்கு முந்திரிச்சம் பழம், பேரீச்சம் பழம், விலாமிச்சம் வேர், தாமரை தாது முல்லை வேர், ஏலம், கிராம்பு, அதிமதுரம், கோஷ்டம், கற்கடக சிங்கி, இந்துப்பு, கஞ்சாயிலை, பேய்புடல், நெல்லிப் பருப்பு, தானிக்காய், கடுக்காய், செண்பகப்பூ, தற்கோலம், சடாமஞ்சி, மஞ்சிட்டி, பச்சிலை, கச்சோலம் வகைக்கு சிறுகஞ்சி பசுவின் பாலில் விட்டு அரைத்து பசுவின் பால் படி.க, நல்லெண்ணை படி.ச எல்லாம் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து மேலுக்குப் பூசி முழுகி உள்ளுக்கு ஒரு கரண்டி கொள்ளவும் பித்த பாண்டு, காமாலை, விஷபாகம் முதலானதெல்லாம் தீரும். பத்தியம் பசுவின் மோர், துவரப்பருப்பு, நச்சுப்பு போட்டுக் கொள்ளவும்.

கவுசை காமாலைக்கு மருந்து:-

சீனிக்காரம், வெங்காரம், பெருங்காயம் இந்துப்பு கல்லுப்பு, பொட்டுலுப்பு வளையலுப்பு, சாதிலிங்கம் பொன்னரிதாரம், சுக்கு, மிளகு, வெள்ளைப் பூண்டு, வறப்பூலான் கொழுந்து, தூதுவளை வேர், ஓமம், வசம்பு இது வெல்லாம் சமன் கொண்டு பொடி செய்து பேய்க்கும்மிட்டிக் காயைக் பீறி அதில் அடைத்து கலசத்திலிட்டு குப்பையில் பதினைந்து நாள் புதைத்து பின்பு எடுத்துக் கொண்டு தினம் ஒரு கீத்துக் கொள்ளவும். மேல் நோக்கிய கவிசை கீழ் நோக்கிய கவுசையும் தீரும். வாதம் எல்லாம் தீரும்.

சேற்றும சுர நிதானம்:-

முகம் வெளுத்து இருககும். இருமலும், சுவாசமும், ஆரோசிக்மும் விக்கல், தண்ணீர் தாகமும், உடம்பு பிடரி நோகும். மேல் மூச்சு எடுக்கும். உடம்பு தினவு உண்டாயிருக்கும். இதற்கு. கசாயம்:

சுக்கு, திப்பிலி, மிளகு சித்தரத்தை, சீரகம், கடுக்காய் வகைக்கு விராகனெடை.2, கண்டங்கத்திரி, சமூலம் முள்ளி வேர், ஆடாதோடை இலை இந்த வகை மூன்றும் விராகனெடை பத்து உரலிலே துவைத்து முன் சொன்ன சரக்கு நறுக்கி கூடப் போட்டு கசாயம் வைத்து வடித்துக் கொண்டு அதிலே வெங்காரம் பொரித்துக் கலக்கிக் கொடுக்கவும் தீரும்.

திப்பிலி ரசயானம்:-

திப்பிலி பலம் மூன்று, வாய் விளங்கம், செவியம், திப்பிலி மூலம், ஏலம், கருஞ் சீரகம், நற்சீரகம், சிறு நாகப்பூவு, அரத்தை, கோஷ்டம், கூகைநீர் இது வகை ஒன்றுக்கு விராகனெடை 3 சாதிக்காய், கிராம்பு விராகனிடை 2 சித்திர மூலம் வேர் தூதுவளை வேர், கண்டங்கத்திரி சமூலம் இது வெல்லாம் உலர்த்திப் பொடி செய்து வகைக்கு விராகனெடை மூன்றும் வஸ்திர காயம் பண்ணி கையாந்த் கரைப் பொடி பலம் ஒன்று சர்க்கரை பலம் மூன்று கூட்க் கலந்து தேன் விட்டு ஆட்டிக் கிளரி இறக்கின பாண்டத்திலிட்டு நெல்லிலே பதினைந்து புடமிட்டு வைத்து எடுத்துக் கொண்டு தினம் நெல்லிக்

காய்ப் பிரமாணம் உள்ளுக்கு கொள்ளவும். பால் வார்த்துத் தின்னவும். உப்பு, புளி விடவும். இதற்குக் காசம் பத்தும் இருமல், மேகம், ஈரல் மடிப்பு கவுடிகை, விப்புருதி மேக வெட்டை முதலானதும் தீரும்.

சுரத்து மேல் அதிசாரக் கழிச்சலுக்கு மருந்து:-

சாதிக்காய், ஊமத்தை விரை, சுக்கு, அதிவிடையம், மாவிரை, வாளைப்பூ, அபினி, கஞ்சாவிலை இது சமன் கொண்டு சிந்தி இலைச் சாறு விட்டரைத்து ஒரு மாத்திரை உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு மோர் முரித்த தண்ணீரில் ஒரு உருண்டையைக் கொடுக்கவும். ரத்த சீதத்துக்கு பச்சை மோரிலாவது விஷ்ணு கிராந்தி சாத்திலாவது கொடுக்கவும். சகல அதிசாரக் களிச்சலும் தீரும்.

அதிசாரக் கழிச்சல் சன்னி சுரத்துக்கு மருந்து:-

கோஷ்டம், அதிமதுரம், விலாமிச்சை வேர், நெல் பொரி, நெல்லிப் பருப்பு, முத்தக் காசு, சந்தனம் வகைக்கு விராகனெடை ஒன்று இது வெல்லாம் பொடி செய்து இளநீர் படி இரண்டு அந்த இரண்டு படியும் அரைப்படியாகக் காய்ச்சி சாயங்காலம் கொடுக்கத் தீரும். இப்படி மூன்று நாள் கொள்ள சுரமும் களிச்சலும் தீரும்.

இரத்தக் கடுப்புக்கு மருந்து:-

காட்டுக் கொட்டைத் தழையைக் கொண்டு வந்து நாரத்தம் பழத்தில் பாதி எடுத்து அரைத்து எருமைத் தயிரில் கொடுக்கவும் தீரும்.

இரத்தமு வரும்பு களிகிறதற்கும் கிராணிக்கும்:-

புங்கந் தளிரை வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக் கொடுக்கவும். அளிஞ்சில் பட்டையை அரைத்து இள வென்னீரில் கொடுக்கவும். கருங் கோழி கருமிளகு சாறு வைத்துக் கொடுக்கவும். மாம்பட்டை அரைத்து ஒரு பிடி சாறு அரைப்படி மோரு கூட்டிக் கொடுக்கவும் தீரும்.

ஒரு படி எருமை தயிரில் ஊமத்தன் சாறு நாலாறு துளி விட்டுக் கலக்கி சூரிய உதயத்துக்கு முன் கொடுக்கவும் பத்தியம் கோழிக் காரத்தில் வெள்ளைக் காரமெடுத்து பனை வெல்லங் கூட்டி அரைத்துத் தின்னத் தீரும்.

சகல கழிச்சலுக்கும்:-

கரந்தம் லோகம், சாதிலிங்கம், அப்பிரேகம், வங்கம் மடல், துத்தம், கற்பூரம் சிலாசத்து மண்டூரம், தேற்றான் கொட்டை, ஆவிரை விரை, புளியன் கொட்டை தோல், வெள்ளைக் குன்று மணிப் பருப்பு, கொடிவேலி வேர், நயம் மஞ்சள், பருத்திக் கொட்டை பருப்பு, வெள் வேலான் பிசின் இது வெல்லாம் சமனாகக் கூட்டி புளித்த காடியிலரைத்து இலந்தைக் கொட்டைப் பிரமாணம் உருண்டை பண்ணி புளித்த மோரில் ஒரு உருண்டையைக் கரைத்து தேன் கூட்டி உள்ளுக்குக் கொடுக்கவும். இதற்கு இருபது வகைக் களிச்சலும் குணமுமாம். இது கை கண்டது.

வயிற்றுக் கடுப்புக்கு:- கிருவன் பட்டையை அரைத்து வெள்ளாட்டுப் பாலில் அந்த மருந்தை

விளாவின் பிசின், வேப்பம்பிசின்

அரைத்துக் கொடுக்கவும். சகல கருப்புக்கும் கை கண்டது. எருமைத் தயிரை வடி கட்டி ஒரு காசத்தனை ஊமத்தஞ் சாறு கூட்டி உள்ளுக்குக் கொடுக்கவும். வேறு நில ஆவரம் வேரைக் கொண்டு வந்து பட்டையைத் தட்டி எருமைத் தயிர் வார்த்து அரைத்து எலுமிச் சங்காயளவு உருட்டி சட்டி காய வைத்து அதிலே உருட்டினுப் போலே வைத்து திருப்பி தீயில் புடம் இட்டு வெதும்பின உடனே எடுத்து பின்று அந்தத் தயிர் விட்டு அரைத்து இந்தப் படி ஏழு புட மிட்டு ஏழாவது புடத்திலே நன்று அரைத்து ஒரு சேரை தயிர் சேர்த்துக் கொடுக்கவும். வயிற்றுக்கு கடுப்பு சீதமும் தீரும்.

வயிற்றெருப்புக்கு:-

புளியங் கொட்டைத் தோலை நறுக்கி நேக அரைத்து தேங்காய்ப் பாலில் கொடுக்கவும் நீங்கும்

வெள்ளெருப்பாய்க் கழிகிறதற்கு:-

முத்தின வேளையைச் சுட்டு அரைத்து எருமை மோரில் மூன்று நாள் கொடுக்கவும்.

சலக் கழிச்சலுக்கு:-

நல்ல நந்தி விரை களச்சி மாத்திரம் அரைத்து தேனில் குழப்பிக் கொடுக்கவும். பெரும் பட்டை பீநாரியிலை எள்ளுப் புண்ணக்குப் போட்டுப் புழுக்கி காலமே தின்று மிகுந்ததை சோத்திலிட்டுத் தின்னவும். வெள்ள வெங்காயம், மிளகு உப்பிட்டுக் காய்ச்சி உண்ணவும். கை கண்டது.

இருமலுக்கு மருந்து:-

கரியாந்த கரையிலை, சிறுக்கீரை வேர், சங்கன் வேர், எருக்கன் வேர், வேலிப்பருத்தி வேர் வகை ஒன்றுக்கு விராகனெடை ஐந்துக்கு கடுக்காய், திப்பிலி, மிளகு சித்தரத்தை இதுவும் வகைக்கு இரண்டு விராகனிடை முன் சொன்ன மூலிகையை உலர்த்திப் பொடி செய்து கடைச் சரக்கை வேற படி பொடி செய்து நன்றாய் நேக அரைத்து அடை சுட்டுக் கொம்புத் தேன் வாங்கி வைத்துக் கொண்டு அன்றாடகம் அடை சுட்ட போது தேன் தொட்டுத் தின்னவும். இப்படி கால் மண்டலம் கொள்ள இருமல் முதலானதும் தீரும்.

ஈளை இருமலுக்கு மருந்து:-

வெள்ளைச் சீலையில் பிராய்ம் பாலூட்டி அதின் பேரில் கையாந்த கரைச் சாறு ஊட்டி நாலு நாள் அதின் மேலே களஞ்சு அரிதாரம் அரைத்து ஊத்தி நிழலில் உலர்த்தி திரியாக்கி மோருஞ் சோர் உண்டதின் பிறகு அந்தத் திரியை எடுத்து அனலிலே பத்த வைத்து அந்தப் புகையை உண்ண ஈளை இருமல் தீரும்.

ஈளை இருமலுக்கு மருந்து:-

வெளித் தாமரை ஒரு பிடி அரைத்து நல்லெண்ணை விட்டு அடை சுட்டுத் தின்னவும். ஆவரை யிலை, கையாந்த கரையிலை, மிளகு அரிசியுடனே வட்டித்து அடை சுட்டு ஏழு நாள் பசுவின் நெய்யிலே குவச்சுத் தின்னவும்.

வெள்ளைக் காவளை வேர், வெள்வெங்காயம், மிளகு இது மூன்றும் கூட்டி நல்லெண்ணையில் பிரட்டி மூன்று நாள் கொள்ளவும். சர்வ இருமல், ஈளை முதலானதும் தீரும். கை கண்டது.

கையாந்த கரை, சிறுக்கீரை, கார்சங்கு, தூதுவளை, மெய்தா நிரம்பு, பெருக்கு மொட்டு வேலிப் பருத்தி யிலை நாலும் நெய் தானிருக்க எண்ணெயினுல் நேக அரைத்து அடை சுட்டு கையாலெடுத்து தின்பீராய் கக்கு கக்கென வென்றோடும்.

வாலை சஞ்சீவி மாத்திரை சகல மாந்தங்களுக்கும்:

ஆசிரியம்.

மதுர மிள கோமமால் தேவிக் கிழங்குடன் மதனிக் காய் லவுங்கம்
மாமுத்தமோடு செங்கத்தாரி பட்டையும் மணிப் பூண்டு சாதிப்பத்திரி
பதினொன்றுமே வகை வகைக்கோர் விராகனெடை பஞ்சல் முடிச்சு கட்டிப்
பழமளவு பொடு தழை யிராகி யுப்பிலைகள் காற் பல வறுத் தெருமையின் மோர்
சதுர் படியிலிட்டுமே காற்படிய தாக்கி முன் சாற்றிய மருந்தரைத்து.

தக்க நிழலில் வைத்தடுத்த நாளுத்தமா தாளி ரசம் விட்டரைத்து
மதமான பீர்கனிலை கோழியவரைச் சாறில் வகை வகைக்கோர் சாமமே
மனைய வரை சுரையினிலை இவை வகைக்கொரு சாமம் வட்டப் பீநாரி சாரே.

2. சாற்றிலொரு நாளரைத்தே குன்றி யளவர கத்தான் செய்து காய்ச்சல் மீது
சலம் போல் கழிந்திடிற்றுள பத்தை வாட்டு நீர் தன்னிலோர் குளிகை தந்தால்
மேற்றிசைப் புக்கும் வலிப்பு மாந்தங்கட்கு வேலிப் பருத்தி ரசமே
மேல் நோக்கும் வாந்திக்கும் வயிறு கழிதற்குமா மெல்லியர் முலைப்பாலுமே
சாற்றரிய புளியஞ் சிறு யெரித் தனல் பண்ணி தனலையே யெடுத்தெரிந்தத்
தானத்திலுத்த மாதானியும் வெண் விந்து தான் விடப் பொரிக்குமதனை
யாற்றி சேய் மேற்று வளை யிட்டாற் குணந் தரு மறுபான மீத நேக
மான பிணி யேகுதற்கே தீ யரிய மறைவலோர் அருள் கொண்டு சொன்னதிதுவே.

சொன்தொரு பக்ஷி தோஷத்துக் குணம் பெறின் சூட்டுடன் தாகமுண்டாம்
சுடர் மஞ்சள் போல் கழியும் நண்டு வளை நீரிலொரு தூய் குளிகை யிட்டிடாய் நீ.
பின்னுமொரு சாமுட்டு சந்நியல் தலை நட்டுப் பெற்றவள் முகத்தை நோக்கும்
பிண்ட மிக நாறுமே சிசு புதைத்த குழியில் பேரறகலாது செடியோ
அன்றடைந்தே வந்து சாலடியினில் விட்டரைத்தந்த நீரில் மணியை
அடைவாகத் தந்திடாய் ஊது மாந்தக் குண மங்க மூதிக் கழியுமே
சன்னக் கொஞ்சியிலை நீரில் வேர்க் கொம்ப சம தாக மொடு கறி வெதுப்புஞ்
சாறு விட்டதிலொன்று குளிகை தந்தால் வினை சாருது வெட்கி யஃமே.

அறு சீரடி விருத்தம்.

வெக்கை வெதுப்பின் குணமோ வாய் வெழுக்கு முடல் காயு விளங்கு வாசத்
தக்காளி ரசம் வாங்கி யிதிற் குளிகை. யுரைத்திடுவாய் சம்பார் வேம்பு
மிக்கான் செம்பிராயப் பட்டையொடு தூள் புரிந்து விளக்கெண்ணெய் விட்
டக் காலங் கொதிக்க வைத்துத் தலைக்கு மிட்டு முன்னுக்கு மளவாய்த் தாவே.

2. தாவுகின்ற கரப்பானின் பொருளா. காவி யிறு மிகத் தானே போகும்
மேவுகின்ற கண் மயிர்கள் அம்பு கணை தொடுத்தாற் போல் விளங்குமே தான்
கூவுகின்ற நாய்ப் பாகலிலை கிழுவன் பட்டை யிலை கூறு மற்றுன்
காவ தற்குப் பிடிங்கி வந்து களற் காயினளவு மொரு கட்டைப் பூண்டும்

3. பூண்டு வசம்பிவை யமியில் வாய் பேசாதரைத் திரண்டு பொருளாய்ப் பண்ணி
வேண்டி யொன்றைச் சிசு தனக் கீந்தடுத்த பொட்டணங் கரத்தில் விள்ங்கக் கட்டி

யாண்டரைத்த அம்மி தனைக் கழுவி மெயிற்றவனை யிட அதனுற் தீமை
நீண்ட பசங் குளித் தோடிந் தீரு மென முதியோர்கள் நிகழ்த்திருரே.

அகவல்.

ஆரமுதங் கொள்ளங்கம் போல
சீரிய வயிறு செறிந்தப்பிச் சுரம்
மாரியடிக்கும் வாந்தியும் பண்ணும்
நேர் விழி சொருகும் நினைவது மாறும்
தாக மெடுக்கும் தகு முறை கேள் நோய்
ஏகக் களைப் பூடிலையும் பூவும்
வாக வொன்ருய் வளமாயரைத்து
காளவரைத் தழை கமுதை யிலத்தி
தானிது பிசைந்து தண்ணீர் வாங்கி
ஒருள்ளிப் பூண்டு முயர்வா வசம்புஞ்
சேர முன்னீரில் திறமா அரைத்து
நீரிற் குளிகை நீட்டியே யந்தச்
சாரிற் சக்கை தையலாற் செல்லும்
பாதையிற் போடப் பாலகன்
வாதையிலாது வாழ்ந்திடுவானே.

காப்பு.

1. அத்தி முகனலரப் பாதமே காப்பு
ஆறுமுகன் சிவசத்தியுங் காப்பு
தித்திக்குஞ் செந்தமிழ மாமுனி காப்பு
தேரையர் சேவடி நாளுமே காப்பு -(ஆனந்தம்)

2. மாந்த மற முலை யேந்திழைக் நீட்டி
வாழ்த்துவேன் காராடு பாலிலே மாட்டி
சீந்தியிலை வேக வைத்திடு வாட்டி
தேறிப் பிழித்தந்தச சாற்றிலே திட்டி

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே-பர
வானந்தம் ஆனந்தம் ஆனந்தமே

3. வாலை சஞ்சீனி நன் மாத்திரை யொன்று
வாகுடனே கொடுத்தாலது நன்று
சீலமுடன் வளர் பாலகன் அன்று
தேறி விளையாடு வானே முயன்று (ஆனந்தம்)

. நொச்சிக் கொழுந்திற் புமவுஞ் சுரும்பு
தோக்கி யெடுத்ததில் தீரொரு செம்பு
உச்சித வெள்ளை வெங்காயம் வசம்பு
ஓமமும் நல்ல மிளகு வேர்க் கொம்பு

5. ஐந்து வகையும் வகைக்கொரு குஞ்சம்
ஆடையிற் கட்டிக் காசயஞ் செய்யெஞ்சும்
வெத்த தத்தகத்தை யரைத்துமே கொஞ்சும்
மேவுஞ் குழந்தை கட்கே யிட மிஞ்சும்

6. பாரிலதிரு மருந்தே யிது மாதே
பாலகர்களுக்கிது சஞ்சீவி போதே
தேரையர் சொன்ன மொழி தவறாதே
தேவி யருள் மிகத் தாவு முப்போதே.

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே பர
மானந்தம் ஆனந்தம் ஆனந்தமே.

சேற்றும இருமலுக்கு மருந்து.

வெண்பா.

~~மாதுளையின் பிஞ்சு மதன் மாமலரும் சுக்குடனே~~
சோதி மதி

1. மாதுளையின் பிஞ்சு மதன் மாமலரும் சுக்குடனே
சோதி மதியுப்பும் ஞா ய் மிளகும் மீதி கேள்
கர்மனையும் கூட்டியே கற்கண்டிலே அரைத்து
நேமமுடன் வாயிலடை நீ.

<u>விருத்தம்.</u>

2. பேசரிய முக்கடுகும் சித்தரத்தைப்
பேரரத்தை கடுக்காயு மைந்துங் கூட்டி
தேசு பெற வகை வகைக்கு விராகனைந்து
சேர்த்து நீ பொடி செய்து வைத்துக் கொண்டு
தோச மிலா கையான் வேர் பிடாரி மூக்கி
தூதுவளை எருக்கு கள்ளி சூரி வேரும்
வாசமுள்ள ஆதண்டை பாலை வேரும்
வகை வகைக்குப் பல மொன்றாய்ப் பொடித்துக் கொள்ளே.

கொள்ளப்பா நல்லெண்ணை படி அரைக்கால்
கோ நெய்யும் படி காலாய்க் கூட்டிக் கொண்டு
மெள்ளப்பா சட்டி யொன்றை அடுப்பிலேற்றி
மெதுவாக ஒரு விரகாலெரித்துக் கிண்ட
விள்ளப்பா பனைவெல்லம் சேர்த்துக் ~~கொண்டு~~ கொள்ளு
மேலான லேகிய மண்டலங் கால் கொள்ள
சள்ளப்பா செய்கின்ற இருமல் வாதை
தானேகிக் கடல் புக்குஞ் சார்ந்து பாரே.

<u>சூனியத்துக்கு மருந்து.</u>

மருதாணி வேர் உதிய மாத்து வேர் எருமைக் கொம்பு புகை காட்ட சூனிய மீளும்
குளித் தாமரை யிலையை அரைத்து பசுவின் வெண்ணையில் விழுங்கச் சூனிய மீளும்
காரெள்ளும் மிலவன் பிசினும் காடியிலூற வைத்து வெவ்வேலான் வேரை எடுத்து குதிரைக் குளம்பு இலையும் நல்ல வெல்லமும் கூட்டி அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கலக்கி மூன்று நாள் கொள்ள மீளும். கை கண்டது.

குன்றியிலையை துவச்சுப் பிழிந்து வெள்ளாட்டுப் பாலில் மூன்று நாள் குடிக்கவும்.
அளிஞ்சில் விரையை அரைத்து களச்சிக் காய் பிரமாணம் வென்னீரில் குடிக்கவும்.

சிறு துத்தி வேர், தூதுவளை வேர், பெரும் பூளை வேர் இவை மூன்றையும் அரைத்துக் காடியில் கலக்கிக் குடிக்க சூனிய மீளும்.

அளிஞ்சி வேர், அரசன் வேர், முன்னை வேர், நீர்ப் பூலான் வேர் இது நாலும் அரைத்துப் பூச முறியும்.

நஞ்சான்டானிலியைப் பரித்து வந்து வெள்ளைப் பூண்டு முளை வாங்கிக் ~~கூட்டித்~~ கூட்டி துவைத்து வைத்து அரைத்து விழுங்கத் தீரும்.

இந்த இலையை நல்லெண்ணையும் புங்கெண்ணை, வேப்பெண்ணை, விளக்கெண்ணையுடன் அரைத்து உடம்புக்குப் பூசவும் தீரும்.

<u>சூனிய மறவைக்கு மீள</u> :-

நற்சீரகம், அளிஞ்சி வேர், காட்டும் குன்னி வேர் இது வெல்லாம் அரைத்து துளசி இலைச் சாற்றில் குடிக்க மீளும்.

<u>மரவைசி மருந்து :-</u>

நற்பாலே வேரை அரைத்து எலுமிச்சம் பழச் சாற்றில் குடிக்க தீரும்.

கோவையைப் பிடுங்கி மேல் புரணியைச் சீவி விட்டு அரைத்து பசுவின் பாலில் குடிக்கவும்.

இலந்தை பிசினை அரைத்து காராட்டுப் பாலில் குடிக்கவும்.

வேலாள் பிசினை அரைத்து பசுவின் பாலில் குடிக்கவும்.

ஐவிலலி விரையை அரைத்து ஒரு எலுமிச்சங் காயளவு பத்து நாள் காலில் நீர் படாமல் காலமே தின்ன நன்று.

இலுப்பைப் புண்ணுக்கு, நாரத்தங்காயளவு கொண்டு வந்து காட்டு முருங்கையைக் கொண்டு வந்து துவைத்து அதற்குள் வைத்து நாற்பது நாள் பொருத்து எடுத்து உள்ளி, வசம்பு, பெருங்காயம் போட்டு உரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குப் பூசத் தீரும்.

<u>கழல் வாதத்துக்கு மருந்து :-</u>

ஞாயிற்றுக் கிழமை நாள் கோழி முட்டை வாங்கி வந்து மஞ்சள் கருவை எடுத்து விட்டு வெள்ளைக் கருவைக் கரண்டியிலூற்றி களச்சிக்காய்ப் பருப்பு மூன்று நறுக்கிப் போட்டு அந்த வெள்ளைக் கருவிலே தூவி அகலில் வைத்து நன்றாய் வெதுப்பி கிளரி தின்னவும். தின்று ஒரு சாமம் இருந்ததின் பிறகு புழுங்கலரிசிச் சோற்றில் வெள்ளாட்டுப் பாலிலாகிலும் பசுவின் பாலாகிலும் உப்பு இல்லாமல் சாப்பிடவும். உப்புப், புளி தள்ளவும். இப்படி மூன்று நாள் சாப்பிட்டு மூன்று நாள் மறு பத்திய மிருந்து ஏழாம் நாள் பத்தியம் முறித்து தலை முழுகி விட்டு சகலமும் கூட்டிக் கொள்ளவும்.

<u>அண்டம் வீங்கினல் மருந்து :-</u>

நாய்ப் பாலே இலையை துவைச்சு உள்ளங் கையில் வார்த்து மூன்று தரம் பருகவும். மற்ற சாறெல்லாம் மேலே துவளை யிடவும் வீக்கம் நீங்கிப் போகும்.

வயிற்றில் விரை எறினல் ஆவாரங் கொழுந்து, சங்கன் கொழுந்து, உற்றம தானிக் கொழுந்து இந்த மூன்றையும் வெற்றிலேயில் வைத்து மூன்று சுருள் மடித்துத் தின்னவும் விரை யிறங்கும்.

<u>ஒரண்ட வாதத்துக்கு :-</u>

விளிம்பியிலே, தேங்காயளவு நீர்ப் பூலான் யிலேயும் அம்மரு பாதி இலேயும் துவைத்து ஒரு படி வெள்ளாட்டுப் பாலில் பிசைந்து வடி கொண்டு பெரியவர்களுக்கு கால் படியும் சிறு பிள்ளைகளுக்கு அரைக்கால் படியும் வெள்ளெண்ணெய் விட்டு பனை வெல்லம் சற்று கூட்டிக் கொடுக்கவும்.

விடத்தலா மாத்து இலே, மாங்காய் மாதிரை அரைத்து சட்டி காய வைத்து ஒரு சட்டிக்கு அடங்க ஒரு சட்டி மேலே வைத்து அரைப்படி நல்லெண்ணெ விட்டு அரைத்து மருந்தைப் போட்டுக் கிளரி வேக விட்டு வென்னீர் வார்த்துக் கொண்டு நாலு நாள் இந்த மருந்தைத் தின்னவும். உப்பு, புளி தள்ளவும்.

<u>வாய்வு குன்மத்துக்கு மருந்து :-</u>

ஓமம் பலம்.1, கடுக்காய் பலம்.1, வெள் வெங்காயம் பலம்.2, கல் லுப்பு படி.இ, கச்சை நாரத்தை இலே தேங்காய் மருவாதி இது வெல்லாம் ஆட்டுக் கல்லில் போட்டு ஆட்டி வடகம் பிடித்து உலர்த்தி வைத்துக் கொண்டு 15 நாள் உள்ளுக்குக் கொள்ளவும்.

வாய்வு குன்மம் தீரும். இது கை கண்டது. பத்தியம் உப்பு, புளி விடவும். மிளகு ஒரு சேரை எடுத்துச் சட்டியைக் காய வைத்து நன்ருய் வெடிக்க விட்டு அரைப்படி தண்ணீர் விட்டு கால்படி காய்ச்சி அதை இருத்துக் கொடுக்கவும் எந்த வாய்வும் தீரும். கை கண்டது.

குன்மத்துக்கு மருந்து :-

சுக்கு, திப்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், இந்துப்பு, பெருங்காயம், நாய்க் கடுகு வகைக்கு விராகனெடை 5, வெள்ளைச்சி வேர் கொண்டு வந்து கண்டங் கண்டமாய் நறுக்கி ஒரு தாளியில் வைத்து நிறையத் தண்ணீர் விட்டு ஒரு விறகிட்டு எரித்து இரண்டு படி தண்ணீர் இருக்கக் கசாயம் இறக்கி வடித்துக் கொண்டு கடைச் சரக்கை அம்மியில் வைத்து அந்தக் கசாயத்தை விட்டு அரைத்து சுண்டைக்காயளவு உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு உருண்டை கொடுக்கவும். இப்படி ஏழு நாள் கொடுக்கவும். இஞ்சிச் சாற்றில் ஏழு நாள் கொடுக்கவும். பருத்திப் பிஞ்சுச் சாற்றில் ஏழு நாள் கொடுக்கவும். சகல குன்மம் தீரும். கை கண்டது.

எரிகுன்மத்துக்கு மருந்து :-

வயிறு எரியும். குடல் வயிறு குளம்பும் வாய் நீர் வரும். தலை சுற்றும். கிறு கிறுத்து மயங்கி வரும். ஏப்பம் வரும். மயிர்க் காலில் வேர்வை வரும். வயிர் பொருமும் நொந்து எரியும். இதற்கு மருந்து வெள் வெங்காயம், இஞ்சி சாத்திர வேதி, இது சமன் கொண்டு வந்து இளநீர் பாலும் சமனுக விட்டு நாலையும் ஒன்ருய்க் காய்ச்சி ஒரு படி நெய் விட்டு சுக்கு, கோஷ்டம், வெங்காரம், இந்துப்பு, அரத்தை சீரகம், திப்பிலி, கொத்தமல்லி, கிராம்பு வகைக்கு களஞ்சு 1-ம் வேக வைத்து வடித்துக் கொண்டு தினம் நாலு களஞ்சு நெய் கொள்ளவும். எரி குன்மமும், பித்த குன்மமும் தீரும். கை கண்டது.

சத்தி குன்மத்துக்கு :-

நெஞ்செரிந்து புளி ஏப்பம் விடும். வயிறு பொருமும். வாந்தி பண்ணும். மலந் தீயும். வாய்வு பரியும். இதற்குத் தேங்காய் பால் படி.1, விளக்கெண்ணை படி.2 இந்துப்பு விராகனெடை.10, வெள்ளைப் பூண்டு விராகனிடை10, சத்திச் சாரம் களஞ்சி சதுரக் கள்ளிப் பாலில் களஞ்சு கூட விட்டு வேக வைத்து கடுகு பதத்தில் வடித்து தினமொன்றுக்கு இரு களஞ்சு எண்ணை விட்டு 7 நாள் கொள்ளவும். உப்பு, புளி விடவும். நீர் மோர் வார்த்துக் கொள்ளவும்.

சத்தி விக்கலுக்கு வெண்பா :-

கொத்தமல்லி வில்வ வேர் கோரைக் கிழங்குடனே
சித்த மல்லி நெற் பொரியும் சேர் சுக்கு மித்தனையும்
ஒது படி நீருழக்காகக் காய்ச்சி யிரு
போது குடிக்க சத்தி விக்கல் போம்.

வாய்வு குன்மத்துக்கு மருந்து :-

சுக்கு பலம்.1, திப்பிலி பலம்.1, மிளகு பலம்.½, கல்லுப்பு பலம்.1, பெருங் காயம்பலம்.½, ஓமம் பலம்.1; கருஞ்சீரகம் பலம்.1 இந்த பத்து வகையும் இளவறுப்பாய் வறுத்து பொடி பண்ணி வைத்துக் கொண்டு நித்த மொன்றுக்கு வெறு கடிப் பிரமாணம் கூட்டவும். இப்படி பத்து நாள் கொள்ள வாய்வு குன்மந் தீரும்.

வயிற்றுப் பொருமலுக்கு மருந்து :-

பெருங்காயம், வெங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி இது வெல்லாம் மிளகு நீரில் குடிக்கவும். வாய்வுக்கு வெள் வெங்காயம் சுக்கு, கடுக்காய், கருஞ்சீரகம் அசமதாகம், மிளகு போட்டுப் பொங்கி உண்ணவும். செரிக்கும். சீரான் கிழங்கு கொண்டு வந்து கீரி உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி ஒரு வேற்கடிப் பிரமாணம் தூள் எடுத்து தேனிலாவது நல்லெண்ணையிலாவது கொள்ளவும்.

~~உஷ்ணத்துக்கு~~ மருந்து :-

உஷ்ணத்துக்கு மருந்து:-

சிறுக்கீரை வேரும், தேற்றான் விரையும் அரைத்து வெல்லம் போட்டு பசுவின் பாலில் குடிக்கவும்.

தென்னம் பாளை குருவை நெல்லரிசி யிலிடித்து களிக் கிளறி பனை வெல்லமும் நல்லெண்ணையும் கூட்டி ஏழு நாளைக்கு தின்னவும் பத்தியம் உப்பு, புளி தள்ளவும். உஷ்ண மெல்லாம் தீரும். கை கண்டது.

நெஞ்சில் வயிற்றில் சீ கட்டினால்:-

சுக்கு, பெருங்காயம், உப்பு சமனாகப் பொடி செய்து இள வென்னீரில் குடிக்கவும். இந்துப்பு எண்ணை வார்த்து வறுத்து எண்ணை மேலே பூச நிற்கும். வயிற்றில் சீ கட்டினால் கற்பூர வள்ளி இலையை காடியில் வேக வைத்துக் குடிக்கவும். விஷ்ணு கிரந்தி இலையை ஒரு கொட்டைப் பாக்களவு அரைத்து கலம்புக் கட்டி மோரில் குடிக்கவும்.

இரத்த வெட்டை, பித்த வெட்டைக்கு:-

சீரகம் ஒரு படி, எலுமிச்சம் பழம் முப்பது, பழத்தில் சாறு வாங்கி அந்த சாத்திலே சீரகத்தை பிசைந்து வைத்து நன்றாய் ஊறினதின் பிறகு எடுத்து முறத்தில் உலர்த்தி வைத்து மறுபடி நொச்சியிலைச் சாற்றில் துவைத்து அதையும் இடித்து தவுடு போக்கி மறுபடி வெத்திலைச் சாறு வாங்கி சீரகத்தைப் பிசைந்து வைத்து நன்றாய் உலற விட்டு இடித்துத் தூளிதமாக்கி வஸ்திர காயம் பண்ணி வெருகடி பிரமாணம் கொள்ளவும். இச்சா பத்தியம். புளி ஆகாது. 20 நாள் கொள்ளவும்.

வெட்டைக்கு:-

நற்சீரகம் பலம்.இ, வெந்தயம் பலம்.இ, ஏலம் பலம்.இ, இந்த மூன்று வகையும் இளச் சீலையில் தளர முடிந்து எருமை சாணி போட்டவுடன் அந்தவெதுப்பிலே சாணியை நீக்கி உள்ளுக்கு வைத்து மூடி விடிகிற வரையில் முப்பது நாழிகை இருக்க விட்டு காலமே எடுத்து இப்படி மூன்று நாள் ராத்திரிக்கு வைத்து எடுத்துக் கொண்டு நன்றாய் உலர்த்தி வைத்துக் கொண்டு தினம் ஒரு விராகனிடை எடுத்து நன்றாய் சுத்தமான விளக்கெண்ணை உள்ளங் கையில் ஒரு காசத்தனை விட்டு உள்ளுக்குக் கொள்ளவும்.

ஈரல் நோவுக்கு நெஞ்சில் சீ குடலேற்றம் ஈரல் பிடிப்பு வயிற்று வலிக்கு:-

செங்கொட்டு மணி வேர், காராட்டுப் பாலில் அரைத்து வெல்லம் போட்டுக் குடிக்கவும் நிற்கும். நெஞ்சிக்கு மருந்து கடப்பங் கொட்டை பாதிக் கொட்டையை நொச்சிச் சாத்திலே உரைத்துக் கொடுக்கவும். பத்தியம் கஞ்சியும், சோறும். ஆனை வணங்கி வேர் கொண்டு வந்து காதில் கட்ட நிற்கும். ஈரல் பிடிப்புக்கு சீரகம் பசுவின் நெய்யிலரைத்து குடிக்க நிற்கும். வயிற்று வலிக்கு ஓமம் நாலு விராகனெடையை நேக அரைத்து எருமைச் சாணிப் பாலில் அரைத்துக் கலக்கிக் குடிக்க நிற்கும்.

உதிரம் விழுகிறதற்கும் பெரும்பாட்டுக்கும்:-

பொன்னாங்காணி வேர் அரைத்து நாளிப் பாலில் கலக்கி துவைய் வைத்து கடைந்து வெண்ணை வாங்கி உள்ளுக்கு வெண்ணையை முழுங்கவும். ஏழு நாள் முழுங்கவும். மூவரட்டை பருத்தி யிலையை துவைத்து வெல்லம் போட்டு மூன்று நாள் குடிக்கவும் மாறும். நல்ல அத்தி வேர், சிந்தி வேர், ஒரு சமனாக எலுமிச்சையளவு பசுவின் பால், நெய் கருப்புக் கட்டி கலந்து குடிக்கவும். மூன்று வருஷத்திய பனை வேர் தாடியில் குடிக்கவும். தென்னம் பாலையை துவைத்து காடியில் மூன்று நாள் குடிக்கவும். ஜான் கொழுந்து வாய் பேசாமல் பறித்து வந்து காடியில் குடிக்கவும். ஏழு நாள் காலையில் மோரில் குடிக்கவும். ஜான் கொழுந்தை துவைத்து நாலு மாதத்திய காடியில் குடிக்கவும்.

வீளியிலையை பிட்டவியல் வைத்து சாறு புளிந்து காலையில் பெருங்காயம் பணவிடை இந்துப்பு பணவிடை கல்பூர சிலாசத்து பணவிடை கூட்டு ஐந்து நாள் கொள்ளவும். உப்பு, புளி விடவும். கை கண்டது.

<u>நீரழிவுக்கு:-</u>

தேங்காயளவு புளியும் இரண்டு படி உப்பு, குறுணி தண்ணியாகக் கரைத்து கோதெடுத்துப் போட்டு அந்த நீரில் நாலு படி நெல்லைப் போட்டு வேக வைத்து. வெந்த நெல்லை முரத்திலே கொட்டி தண்ணீரை வடித்துப் போட்டு உடனே உரலிலே போட்டுக் குத்தித் தீட்டினால் அரிசி முளிக்கிடும். அந்த அரிசியை பொரித்து நெரித்து அந்த மாவு தின்ன நீரழிவு மாறும். கை கண்டது.

<u>கவுசைக்கு மருந்து:-</u>

சிவந்த நாயிறு, விச மூலம் செம்முள்ளி மூலம், ஆதுவிளை மூலம் உலர்ந்த சுரக் கொடியைச் சுட்ட சாம்பல் காருட்டுக் கோயமத்தில் நாளி சேர்த்து எலுமிச்சங் காயளவு உசிலம் பட்டையை அரைத்து எலுமிச்சங் காயளவு சாம்பலுங் கரைத்துக் குடிக்கவும். பத்தியம் பசுவின் பாலும், நெய்யும் சேர்க்கவும்.

<u>குடு குடுப்பாலுக்கு:-</u>

முள்ளி வேர் முத்தினதாய் பிடுங்கிக் கழுவி விட்டு கல்லுப்பை நேக அரைத்து அந்த வேரில் பூசி அடுப்பில் சுட்டு இப்படி ஏழு தரம் உப்பை அரைத்து பூசி அடுப்பில் ஏழு புடமிட்டு அரைத்துக் குடிக்கத் தீரும். நீர்ப் பூலாந் தழையை எலுமிச்சங் காயளவு அரைத்து வெண்ணெயில் முழுங்கத் தீரும்.

<u>குதி வாதத்துக்கு:-</u>

முடக்கு தானிலையை அரைத்து நல்லெண்ணெயில் குழப்பி குதியிலும் புடத்திலும் பூசி மம்மிட்டியைக் காய வைத்து அதின் மேலே பேய்க் குமிட்டிக் காயை கீறும் மேலே அமத்துப் போட்டு நன்றாய்க் காய்ச்சி ஒத்திடத் தீரும். கை கண்டது.

வேப்பெண்ணெயைக் காய்ச்சி அந்தப் படி காலைத் தேய்த்து அந்தக் குதியிலே ஒத்திடத் தீரும். எருக்கலம் பழுப்பு முடக்கத் தானிலையும் துவைத்து சாறு புளிந்து நல்லெண்ணெய் காசிடை விட்டு செங்கல் குழியாக்கிக் காய்ச்சி சாறு விட்டு மூன்று நாள் பிடிக்கத் தீரும்.

<u>நீர்ப் பாட்டுக்கு:-</u>

முருக்கிலை ஒரு பிடி துவைச்சு நாளி நீரில் கலக்கி ஒரு பிடி உப்புப் போட்டு உழக்காகக் காய்சி குடிக்கவும். வெற்றிலையில் உள் நரம்பு சரிய சுண்ணாம்பு ரொம்ப இட்டு ஓட்டை நன்றாய்ச் காய்ச்சி பத்து வெத்திலையிலிட்டு அந்த ஓட்டிலே வணக்கி கரிக்கின பிறகு நாளி தண்ணீர் விட்டு கால் படியாகக் காய்ச்சி அந்த தண்ணீரை ஆறின பிறகு இருத்துக் குடிக்கவும் நிற்கும்.

<u>எண்ணெ நசியம்:-</u>

அரைப்படி மிளகு, எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து இரண்டு படி நல்லெண்ணெயில் போட்டு வெற்றிலைச் சாறு அரைப்படி விட்டு ஒரு தடவைக்கு ஒரு கட்டை வெள்ளைப் பூண்டு நறுக்கிப் போட்டு வெற்றிலைச் சாறு சுட வேக விட்டு இறக்கி நாசியிலும் விட்டு தலைக்கும் தேய்த்து முழுகவும். இப்படி பதினைந்து நாள் முழுகவும் பீனிசம் தீரும்.

ஆதண்டன் சாறு கரியாந்த கரைச் சாறு, ஆடாதோடைச் சாறு, நொச்சிச் சாறு, பச்சை மஞ்சள், நாலு நாரத்தம் பழச் சாறு இது வகை ஒன்றுக்குப் படி ஒன்று மிளகு, சுக்கு, வெள்ள வெங்காயம், மரமஞ்சள் வகை ஒன்றுக்கு விராகனிடை ஐந்து பொடி பண்ணிக் கூடப் போட்டு எந்த வகை எண்ணெ முழுகிறதோ அந்த வகை எண்ணெ மூன்று படி விட்டு எரித்து பத்தத்தில் வடித்துக் கொண்டு முழுகவும்.

பேய் மிரட்டி வேர் இளைய சீவி பொடி செய்து போட்டு நல்லெண்ணை படி ஒன்று கடுகு ரோகணி படி அரை ஆலாங் கட்டி திருநீற்று ஆலா விழுது ஒரு பிடியும் அரைத்து பசுவின் பாலுடன் நல்லெண்ணை விட்டு மூன்று நாள் குடிக்கவும்.

முகசன்னிக்கு பல்லு சன்னிக்கு :-

நல்லெண்ணை படி ஒன்று, பேய்க் குமிட்டி வேர் ஒரு பிடி வெள் வெங்காயம் ஒரு சேரை வசம்பு கூட்டி நசுக்கி நல்லெண்ணையிலெரித்து நாசிக்கு விட்டு தலைக்கும் பூசி உடலெங்கும் பூசி தவளையிட சன்னி தீரும்.

சன்னி சுரத்துக்கு :-

நாயுருவி வேர், கண்டங் கத்திரி வேர், கிலு கிலுப்பை வேர், வெள்ளாட்டுப் பால் நாழி, புளியிலைச் சாறு நாழி, நொச்சிச் சாறு நாழி, ஒரு கட்டைப் பூண்டு வசம்பு வெளிச்சிப் பிசிறு, கருஞ்சீரகம், வகைக்கு இரு களஞ்சு கொண்டு விளக்கெண்ணெய் நாழி யால்க் காய்ச்சி கோழி முட்டைத் தயிலங் கூட்டி இடவும். உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கு இடவுந் தீரும்.

தனிக் குளிருக்கு மருந்து :-

வெள்ளைப் பாஷாணம், கெவுரி பாஷாணம், அரிதாரம், சாதிலிங்கம் இது நாலும் சரியாக நிறுத்து அதிலே இந்த நாலு மருந்தும் நின்ற நின்ற நிறைக்கு கள்ளிப் பால் சட்டியில் வார்த்து அதிலே இந்த நாலு மருந்தும் போட்டு பால் சுண்ட வறுத்து வெந்நீர் விட்டரைத்து பயறளவு உருட்டி உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு குளிகை வெந்நீ ரில் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் துவரப்பருப்பு, புளி யில்லாமல் காய்ச்சி சட்டி தாளியாமல் காய்ச்சி சோத்தில் போட்டு தின்னவும்.

குளிருக்கு வெதுப்புக்கு :-

மட்ல் துத்தம் காசிடை, கெவுரி பாஷாணம் காசிடை, துருசு காசிடை இது மூன்று கரு ஊமத்தன் சாறு விட்டு அரைத்து பயிறளவு உருண்டை பண்ணி கருப்புக் கட்டியில் கொடுக்கவும். உப்புப் புளி தவிர்க்கவும்.

வெதுப்புக்கு :-

வெள்வேலான் கொட்டைப் பருப்பு ஐம்பது மிளகு நூறு, எலுமிச்சம் பழச் சாற்றி லிட்டு மூன்று நாள் இருக்க விட்டு எடுத்து இஞ்சிச் சாறு வார்த்தரைத்து மிளகு போலுருட்டி அந்தக் குளிகையில் ஒரு உருண்டை நெய்யுடன் குப்பிக் கொள்ள வயிறு களியும். வெதுப்பு போம்.

அகத்திப் பட்டை கொண்டு வந்து குறு நீரிலரைத்து வாய் நாவெல்லாம் கொப்பளித்து சுத்தி செய்து விட்டு இள் வெந்நீரில் கொள்ளவும் தீரும்.

காமாலைக்கு மருந்து :-

வரி கத்தாளையைக் கொண்டு வந்து சிறக அரிந்து கழுவி விட்டு எருமைப் பால் காய்ச்சி அதில் இந்த வேரைப் போட்டு அமுது விட்டு தயிரானால் அந்த வேரை எடுத்து அரவு பொடியும் கூட்டி இரண்டு கடுக்காயும் கூட்டி அரைத்து அந்தத் தயிருடன் மூன்று நாள் கொள்ளவும் காமாலை, சோகை தீரும்.

வெள்ளெழுத்துக்கு :-

ஆனை முசுட்டை வேர் பசுவின் பாலில் புழுக்கி உலர்த்தி முலைப் பாலில் உரைத் திட மாறும். கை கண்டது.

மாலைக் கண்ணுக்கு :-

சிறு குருஞ்சா வேரை நறுக்கி முலைப் பாலில் அரைத்து மூக்கிலும், கண்ணிலும் புளியத் தீரும்.

கண்வலி நோவுக்கு:-

குப்ப மேனி வேர் பட்டையை வாங்கி மென்று மாறு செவியில் பிளியத் தீரும்.

கண் புழு வெட்டுக்கு:-

கோழியவரை வேரை மென்று கண்ணில் புழிய மாறும்.

மூக்கில் ரத்தம் விழுந்தால் பல்லில் புழுவுக்கு:-

அப்பைக் கிழங்கு மாங்காயளவு அரைத்து எருமைத் தயிரை சீலையில் கட்டித் தூக்கிக் கட்டியாக விட்டு மருந்தைக் குழப்பி உச்சந் தலையில் கட்டவும். இப்படி மூன்று நேரம் கட்டவும்.

நரம்புச் சிலந்திக்கு:-

நாயுருவி யிலையை முள்ளிக் காயளவு அரைத்து நல்லெண்ணையில் குழப்பி முழுங்கத் தீரும்.

குட்டிப் பிடாவை பேசாமல் போய் மூன்று தரம் பிரதட்சணம் வந்து சூரியனுக்கு ஒரு காசு காணிக்கை வைத்து ஒரு பிடி இலையைப் பறித்து வந்து அரைத்து வலது புறம் நொந்தால் இடது புறத்தில் பூசவும். இப்படி மாறு பாகமாய்ப் பூசவும். புறங்காலிலும் தொடையிலும் விளக்கெண்ணெய் பூசி அருவெய்யிலிலிருக்கவும்.

தலைப் புழு வெட்டுக்கு:-

சீதேவியார் செங்கழு நீர் சீந்தித் தண்டும் இரண்டையும் தலைச்சு ஒரு படி பசுவின் நெய்யில் ஒரு படி கட்டி வெள் வெங்காயம், செண்பகப்பூ, வசம்பு இவை எல்லாம் அரைத்து கொதிக்க வைத்து எட்டு நாளைக்கு ஒரு முழுக்கு முழுகப் போம். வெத்திலை, மிளகு தின்று நாவு வளிக்கப் போம்.

விரேசனத்துக்கு:-

நேர்வாளம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், வெங்காரம், கெந்தகம், கடுகுரோகணி வகைக்கு இரண்டு விராகனிடை இந்தச் சரிக்கு இதுவெல்லாம் ஒரு நிறை நேர் வாளம் சுத்தி பண்ணினது ஒரு நிறை கற்றாளன் சாறு ஆகுதல் பிரமிதண்டை ஆகுதல் வார்த்து அரைத்து சுண்டைக்காயளவு உருண்டை பண்ணி வெல்லமாவது, விளக்கெண்ணெயாவது கொடுக்கவும். வயிறு கழிந்தால் நெய், அவரைப் பருப்பு மோர் கூட்டவும்.

நாலு நாள் மாறலுக்கு:-

வெள்ளைப் பாஷாணம் பருத்திக் கொட்டை மாத்திரம் உடைத்து இரட்டைச் சீலையில் கட்டி ஒரு சட்டியிலே சுண்ணாம்புக் கல் அரைப்படி கொட்டி அந்த மருந்தை வைத்து மேலும் அரைப்படி சுண்ணாம்புக் கல் கொட்டி தண்ணீர் விட்டு மேலே சட்டியிலிட்டு மூடி மத்தியானம் வரைக்கும் வைத்து அது மேல் எடுத்து ஐந்து காசடை பாஷாணத்துக்கு பத்துக் காசிடை சுண்ணாம்பு கூட்டி நன்று அரைத்துப் பதம் வராதிருந்தால் விளக்கெண்ணெய் விட்டரைத்து பயிறு மாதிரி உருட்டி உலர்த்தி நாலு நாள் மாறலுக்குத் திப்பிலி சுட்டி இள வென்னீரில் கொடுக்கவும். மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம், உப்பு, புளி எண்ணெய் புண்ணுக்கு ஆகாது. முருங்கைக் காய் துவரைப் பருப்பு, வென்னீர் கூட்டவும். பத்தியம் தப்பிலல் கால், கை பிடிக்கும். சுக்குச் சுட்டு எருமைத் தயிரில் குடிக்கவும்.

மறுபாகம் வாழைப் பழத் தோலும் புளியன் வேர் மேல் தோலைச் சீவிக் கொண்டு பிசைந்து வடித்துக் கொண்டு பனை வெல்லம் கலந்து மாறல் வருகிற நேரத்தில் கொடுக்கவும். இதற்கு நசியம் ஆட்டுக் கோமயம் ஒரு சேரை நாலு காசளவு தேன் விட்டு இரண்டு முள்ளிக் காய் நிலத்தில் புதைத்து எட்டு நாள் இருக்க விட்டு வேரை முள்ளிச் சாறு விட்டு அரைத்து மூக்கில் விடவும்.

பெரும்பட்டைப் பீநாறி இலை கொண்டு வந்து ஒரு பிடி மிளகு போட்டு

இடித்து ஞாயிறு, செவ்வாய் வந்தால் கொடுக்கவும். இதற்கு மாத்த தலைக்கு வென்னீர் வார்த்துக் கொண்டு சுண்டைக்காய், மிளகு நீர் கொடுக்கவும்.

இதற்குக் குளிசம் கொளுஞ்சி வேர் புரண்டி ஞாயிற்றுக்கிழமை நாள் கோழி பலி கொடுத்து பிடுங்கி வந்து கன்னி யளியாத பிள்ளை நூலில் குளிச மாட்டிக் கட்ட நிற்கும். பெருச்சாளி வயிற்றில் நாலு பெரிய வசம்பு போட்டு இரண்டு [illegible] புடி கழுதை மூத்திரம் வார்த்துப் பானையிலிட்டுப் புதைத்து இருபத்தி நாலாம் நாளெடுத்துக் கொண்டு அந்த வசம்பைத் தண்ணி யிலுரைத்துக் கண்ணிலிட நாலா மாறல் நிற்கும்.

ஆனை வணங்கி மூன்று வேர் பிடுங்கி வந்து குளிச மாட்டி கையில் கட்டி முக்கால் முகத்தில் தண்ணீரிலரைத்துப் போட நிற்கும்.

மூன்று மாறலுக்கு குளிருக்கு:-

மிளகு, எருக்கிலம் பூ, எரு கட்டை, வெள்ளைப் பூண்டு மூன்றும் அரைத்து ஞாயிற்றுக் கிழமை, செவ்வாய்க் கிழமை முறையில் பொட்டணங் கட்டி மூக்கில் புழிய நிற்கும்.

சிறுநீர் சிறுத்து விழுகிறதற்கு:-

கார்ரை மேல் படர்ந்த கட்டுக் கொடியிலையைக் கொண்டு வந்து துவைச்சுப் பழந் தண்ணீரில் பிசைந்து பனங் கருப்பட்டி கூட்டிக் கலந்து குடிக்க நிற்கும்.

வாய்வுக்குச் சூரணம்:-

கருஞ்சீரகம் பலம் ஐந்து, பெருங்காயம் பலம் நால், சுக்கு பலம் ஒன்று, திப்பிலி பலம் ஒன்று, மிளகு பலம் ஒன்று, கல்லுப்பு பலம் ஒன்று, ஓமம் பலம் ஒன்று, சீரகம் பலம் ஒன்று இவை எல்லாம் இள வருப்பாய் வறுத்துப் பொடி பண்ணி வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். வென்னீர் மேலுக்கு முழுகவும் வாய்வு தீரும்.

புதகழலைக்கு மருந்து:-

இந்துப்பு, சீரகம், நொச்சிச் சாறு, ஆட்டுப் புழுக்கை, வெள்ளாட்டுக் கோமியத்தில் நொச்சிச் சாறு விட்டரைத்து வத்த அரைத்து பத்து நாள் பூசக் கரையும்.

வாழ மடல் சுட்டுக் கருக்குப் பண்ணி உவர் மண்ணும் சுண்ணம்புத் தண்ணீரில் அரைத்துப் பூச (ஊளை (சழி) மூக்கு போல்) விழுந்து போகும். செங்கீரைத் தண்டைக் காசு போல் நறுக்கிப் பொடி செய்து சுண்ணம்பில் குழைத்து களலை மட்டும் வைத்துக் கட்டவும்.

குடல் வாதம் முழங்கால் வாதத்துக்கு:-

புங்கம் வேர் பருவேர் வெட்டிக் கழுவிப் போட்டுப் புரணி சீவி விட்டு வெள்ளைச் சிராயைச் சீவி வட்டிலில் பிழிய ஒரு கரண்டியில் பாதி சாறு விட்டுக் குடிக்கவும். முதல் கரியையும் உரைத்துக் குடிக்கவும். உப்பு, புளி விடவும்.

முதியார் கூந்தல் கழல் பருப்பு முருங்கை வேர் நல்ணெய் தனில்
பொதியார் சுக்குத் திப்பிலியும் போர்ந்த மிளகு கருங் கொள்ளு
கொதியாய் வந்த பழ மோரில் கூட்டி யுண்ண வல்லீலபய்
விதியார் வந்த குடல் வாதம் வேறே யற்றுப் போந்தானே.

முழங்கால் வாதத்துக்கு:-

பூவரசன் பட்டை இலையும் வரகரிசி யிலிடித்து களிக் கிளரி நெய் வார்த்துத் தின்னவும்.

அற்பு வாதத்துக்கும் மடி வாதத்துக்கும்:-

சென்ன கரப்பட்டை ஒரு பிடி மிளகு அரைப் படி வெள்வெங்காயப் பருப்பு மூன்றையும் பொன்னிறமாய் நல்லெண்யில் கொதிக்க வைத்து அரைப்படி சாறு பிழிந்து

குடிக்க இப்படி மூன்று நாள் குடிக்கவும் தீரும்.

வாதம் பிற வலிப்புக்கு மருந்து:-

எருக்கிலம் பால் படி ஒன்று, வெள்ளாட்டுப் பால் படி ஒன்று, நொச்சியிலைச் சாறு படி ஒன்று, புளியிலைச் சாறு படி ஒன்று இது வெல்லாம் கலந்து கொண்டு தயிலம் மிளகு பதமாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு கிணுக்களிலும் முழங்கை, முழங்காலில் தேய்க்கவும். குடோரிப் பாயிட்டுத் தேய்க்கவும். உள்ளுக்குக் கண்டங்கத்திரி வேர் வெண்ணையிலுரைத்து நாக்கில் தேய்க்கவும். பெருங்காயமும் உள்ளுக்குக் கொடுத்து நாக்கிலே தேய்க்கவும். பச்சை நாவி ஒரு காசிடை, வெள்ளைப் பாஷாணம் கால் காசிடை, நேர்வாளம் ஒரு காசிடை, துப்பா கெந்தகம் ஒரு காசிடை, அரிதாரம் ஒரு காசிடை, சாதிக்காய் இரண்டு, கடுக்காய் ஐந்து சோமனாத பெருங்காயம் அரைக்கால் காசிடை, செவ்வகத்திப் பூவு, செம்பருத்திப் பூவு, எலுமிச்சங் காயளவு கிடையாவிட்டால் எருக்கம் பூவ வேலிப் பருத்திப் பூவ கொணர்ந்தும் எலுமச்சங் காய் மாதிரி காட்டு முருங்கைப் பூவு வார்த்தரைத்து காட்டா மணக்கு வாட்டிப் பிழிந்து அந்தப் பால் ஒரு பங்கும் திருகு கள்ளிப் பால் ஒரு பங்கும் மா எண்ணெய் ஒரு பங்கும் ஆக மூன்று வகையும் வார்த்து அரைத்து வியாதிக்குக் கொடுக்கிறது. பாக்களவு ஒரு கட்டைப் பூண்டும் அசமதாகம் கூட்டி இள வெந்நீரில் கொடுக்கவும். பத்து தரம் எட்டு தரம் வயிறு கழிந்தால் தவிப்பானால் வெந்நீரில் வார்த்துக கொள்ளவும். பத்தியம் கரணைக் கிழங்கு பெருங்காயம் பசுவின் பால் கூட்டவும்.

கொடிப் பவுத்திரம், ஆசனப் பவுத்திரத்துக்கு:-

சுக்கு, மிளகு, அசமதாகம், வெள் வெங்காயம், வசம்பு, கிராவந் தழையும் வாகை இலையும், கம்பிளியும் கருக்கி தண்ணீரில் கரைத்துக் கொடுக்கவும். காதடைத்தால் புழுங்கலரிசியை மூன்று தரம் கழுவிப் போட்டு கூட்டரைத்து அச்மதம், மாங்கொட்டை இதுவமரைத்து மோரில் காய்ச்சிக் கொடுக்கவும். கை கண்டது. கள்ளச்சித் தழையைப் பாலில் அடித்துத் தழையைப் புண்ணில் கட்டவும் தீரும். செம்பகப்பூக் கிழங்கு கட்டவும். அத்தித் தழையை நல்லெண்ணெயில் கரிக்கிப் போடவும்.

ஆசனப் பவுத்திரத்துக்கு: வேலிப் பருத்தியைப் பறித்து துவைத்து சிறு நீரில் வறுத்து ஒத்திட்டுச் சுடச் சுடக் கட்டவும்.

பவுத்திரத்துக்கு:-

புரை விழுந்தால் வேலிப் பருத்திக் கொழுத்தின் பாலைப் புரையிலே ஏற்றி இந்த மருந்தைக் கட்டவும். இப்படி ஒரு மண்டலம் கட்டவும். உப்புப் புளி தவிர்க்கவும்.

அளிஞ்சில் வேர், எருக்கிலம் வேர், அரசன்பு பட்டை இது மூன்றும் எலுமிச்சங் காயளவு தனித் தனியாய் அரைத்துக் கொண்டு பிரண்டையைத் துவைச்சுச் சாற்றைப் பிழிந்து கொண்டு இரண்டு வருஷம் சென்ற கருங் கோழியும் சோமனாதப் பெருங்காயமும் ஒரு படி நல்லெண்ணெயும் மிளகு, கடுகு, சீரகம், வெள்வெங்காயம் இது வெல்லாம் அரைத்துக் கொண்டு இரண்டு படி சாற்றில் கரியைக் கழுவாமல் திமிர்ந்து சட்டி காய வைத்து நல்லெண்ணெய் விட்டுப் பெருங்காயம் போட்டுத் தாளிதம் பண்ணி வெந்து இறக்கும் போது நல்லெண்ணெய் விட்டுக் கொதிச்ச போது இறக்கிக் கொள்ளவும். உப்பு, புளி போடாமல் சோற்றிலிட்டுத் தின்னவும். அந்தக் கரிசில் வழிய மட்டும் சிலவழியாமல் கை யிடாமல் அகப்பை யிட்டுத் தின்னவும்.

புண்ணுக்குக் கட்ட மருந்து:-

கருங் குட்டி தக்காளி யிலை ஒன்பது இலை பறித்து வந்து வெந்நீரிலே போட்டு வீக்கத்தின் மேலே வைத்துக் கட்டவும். முட்டைச் சாம்பல் வஸ்திர காயம் பண்ணி விளக்கெண்ணெய் விட்டுக் கலத்தின் புறத்தியில் தேய்த்து விளக்கெண்ணெய் விட்டுச் சாரித்து சிமிளில் வழித்து உடையாத வியாதிக்கு சிறு ஆமணக்கு இலையை வாட்டாமல் கட்ட உடையும். உடைந்த பின்பு வேப்பன் கொழுந்து விளக்கெண்ணெயில் பொரித்துக் கட்டவும். பின்பு திரி

திரியேற்ற வேண்டு மென்முல் நாயுருவி இலையும், வேப்பன் கொழுந்து, ஐந்து மிளகும், கல்லுப்பு இலுப்பைப் புண்ணுக்குங் கூட்டி விளக்கெண்ணெய் வார்த்து அரைத்து சீலையில் தடவிப் புண்ணில் கட்டவும்.

<u>பவுத்திரத்துக்கு</u>:-

சோமனுதப் பெருங்காயம் விராகனிடை எட்டு, கோரோசினம் விராகனெடை நாலு, திப்பிலி விராகனிடை நாலு, இந்துப்பு விராகனெடை நாலு, சாதிக்காய் விராகனிடை நாலு, கிராம்பு விராகனிடை நாலு, சித்திர மூலம் வேர்ப் பட்டை விராகனிடை பதினறு, செங் கத்தாரிப் பட்டை விராகனிடை பதினறு இது வெல்லாம் பொடி பண்ணி மூன்று படி நல்லெண் ணெயில் கலந்து கொதிப்பித்துச் சிவந்த பதத்தில் இறக்கி நாலு விராகனிடை ஏலம் பொடி பண்ணி போட்டுக் கொண்டு தினம் ஒன்றுக்கு அரைக்கால் படி எண்ணெயாக அரை மண்டலம் கொள்ளவும். பத்தியம் பாலும், சோறும் உண்ணவும். நாலு வகைப் பவுத்திரமும் தீரும். ஆணியும் விழும்.

ஆவாரை வேர்ப் பட்டைப் பொரணியைச் சீவி விட்டு இடித்துத் தூ.ளானல் பெரிய பலத்தில்இருபது பலம் நாலு வள்ளத் தண்ணீர் விட்டு இரணடு நாள் காய்ச்சி இரண்டு படியானல் இறுத்துக் கொண்டு இதில் நல்லெண்ணெய் படி ஒன்று, பசுவின் நெய் படி ஒன்று, தண்ணி முட்டான் கிழங்குச் சாறு படி ஒன்று, கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு, திப்பிலி, மர மஞ்சள், அதிமதுரம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, நல்ல சந்தனம், செஞ்சந்தனம், நெய்தல் கிழங்கு, மண் திட்டி, சுக்கு, ஓமம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், பற்படாகம், பருத்திப் பூவு, பருத்திக் கொட்டை, செங்குன்றி வேர், நிலப் பனைக் கிழங்கு, ஆலான் விழுது, நாவி, கோரைக் கிழங்கு, பொன்முசுட்டை வேர், நற்சீரகம், கருஞ்சீரகம், சதகுப்பை வகை ஒன்றுக்கு விராகனிடை மூன்று பசுவின் பால் வார்த்து அரைத்து எண்ணெயில் கலந்து இரண்டு இளங் கொதியிட்டு மூன்றும் நாள் மினகு பதத் தில் வடித்து உள்ளுக்குத் தினம் காசிடை கொள்ளவும். இதற்கு மூத்திரக் கிரிச்சி, துன் மாங்கிஷம் அண்டம் உடைந்து நீரழிவு, லிங்க தோஷம், பவுத்திரமுந் தீரும். பத்தியம் பசுவின் பால் சேர்க்கவும்.

<u>விக்கலுக்கு மருந்து</u>:-

மாதளம் பழம், நெற் பொரி, சர்க்கரை, திப்பிலி தேனிற் குழைத்து முழுதங்கவும் நிற்கும். வெள் வெங்காயம் சுக்கு, நாலு மிளகு, கையாந்த கரைக் கொழுந்து, நாலு வெண் ணெயில் குழப்பி முழுங்க நிற்கும்.

கொடிவேலி வேர், பனை மேல் புல்லுருவி வேர், வெல்லம் இது வெல்லாம் கூட்ப் போட்டு இடித்துத் தூள் பண்ணி நல்லெண்ணெயில் ஊறப் போட்டுத் தின்னவும்.

<u>பெய்வீக்கம், அரையாப்பு தண்டில் சீவி விழுகிறதற்கும்</u>:-

புழுங்கலரிசி, களிப்பாக்கு வெகு நாள் பட்ட காரை அரைத்த கட்டி கொடிவேர், வெங்கக் கல்லு இது வெல்லாம் ~~இது வெல்லாம்~~ நறுக்கி எருக்கலம் பால் விட்டு அரைத்து வீக்கத்தில் தடவ வீக்கந் தீரும். ஐவிரலியை அரைத்து ஒரு எலுமிச்சங் காயளவு பத்து நாள் கால்லிலே நீர் படாமல் காலமே தின்னவும். வாளக் காம்பைச் சீவிப் போட்டுத் கவைத்து ஓட்டில் வைத்து தீ எரித்து சாம்பல் கருக விட்டு கோழி முட்டைக் கருவெடுத்து விட்டு வெள்ளைக் கருவை அந்த சாம்பலில் விட்டுப் பிசைந்து வில்லை போல் தட்டி அரையாப்பு வீக்கத்தில் வைத்துக் கட்டவும். சீலை போட்டுக் கட்டவும். நன்ருய்க கட்டி மூன்று நாளான பிறகு கட்டை அவிழ்த்து எரிந்து வட்டு சித்தகத்தித் தழையை வணக்கிக் கட்டவும். இப்படி ஏழு நாள் கட்ட வீக்கந் தீரும். கை கண்டது.

<u>சிறுநீர் சிறத்து விழுகிறதற்கு</u>:-

பெருந் தும்பியிலை கொண்டு வந்து எருமைத் தயிர் வார்த்து அரைத்து எலுமச்சம் பழத்தளவில் மருபாதி உருட்டி நாரத்தங்காயத்தனை தயிரில் குழப்பி முழுங்கவும் குணமாகும்.

இரத்த மூலத்துக்கு:-

சங்கன் வேரைப் பாலில் அரைத்துக் குடிக்கவும். வாழைப்பழம் கூரைச் சருகும் அரைத்துக் குடிக்கத் தீரும்.

இரத்தப் பிரமியத்துக்கு:-

கோழிக்காரம், வெள்ளைக் காரம், எடுத்து பனை வெல்லம் கூட்டி அரைத்து தின்னவும் தீர்ந்து விடும். கை கண்டது.

இருந்தீட்டுக்கு:-

தேத்தாங் கொட்டையும் எள்ளும் அரைத்து வெந்நீரில் குடிக்கவும். ஒரு வெங்காயம் படி கால், பசுவின் வெண்ணெய் எலுமிச்சங் காயளவு உருண்டை வெல்லமும் கூட்டிக் குடிக்கவும். உப்பு, புளி விடவும். சிறு குமிழப் பட்டை ஒரு சேரை நல்லெண்ணெய் பசுவின் பால் ஒரு படி இது மூன்றும் மெழுகு பதமாகக் காய்ச்சி மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் பசுவின் பால், வெந்நீர் கூட்டவும்.

மருந்தீட்டுக்கு:-

கொடிவேர், எலுமிச்சங் காய் மாத்திரம் மதக்காரை வேர்ப் பட்டை எலுமிச்சங் காய் மாத்திரம் பசுவின் பால் படி ஒன்று, நல்லெண்ணெய் படி ஒன்று இது வெல்லாம் கூட்டி மெழுகு பதத்தில் வடித்து மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் பசுவின் பால், வெந்நீர் கூட்டிக் கொள்ளவும் தீரும். கை கண்டது.

இரத்தம் உடலில் நின்றால்:-

முருங்கையிலைச் சாற்றில் நல்லெண்ணை சேர்த்துக் குடிக்கவும். சுடு காட்டில் ஆவரை வேர் வடக்கே போகிற வேரைக் கொண்டு வந்து ஏலம், சீரகம், ததயிர், தண்ணீர் வார்த்து அரைத்து தயிரில் மூன்று நாள் கொடுக்கவும்.

நரி தின்ன நண்டு கொண்டு வந்து அலசிப் போட்டு தயிரில் அரைத்து குடிக்கவும். கருங்கத்திரிக்காய் ஏழு கொண்டு வந்து இரு நாழி தண்ணீர் வார்த்து ஒரே தண்ணீராய்க் காய்ச்சி அந்தத் தண்ணீரை உப்புப் போடாமல் கொடுக்கவும்.

விப்புருதிக்கு:-

பாவட்டம் வேரை அரைத்து அட்டரையும் சீரகமும் கலந்து வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கவும். உப்பு இல்லாமல் பாலுஞ் சோறும் உண்ணவும்.

கெற்ப விப்புருதிக்கு:-

சங்கங் குப்பியிலை, சிறு விளாங்காயளவு முடக்கத் தானிலையும், ஆவரை இலையும், ஒரு கட்டை வெங்காயம், இரண்டு ஆனை, வசம்பு இரண்டு இது வெல்லாம் கல்லில் கூட்டி நறுக்கி ஒரு பிடி வளக்கெண்ணெயில் வேக வைத்து இரண்டு கொதி யிட்ட பிறகு எண்ணெயை இறுத்துக் கொண்டு ஆற வைத்து தூரமான இரண்டாம் நாள் உள்ளே கொள்ளவும். வயிற்றிலே உடைந்து வெகுவாய்க் கழியும். இதற்கு மாத்து மோருஞ் சோறும் கொடுக்கவும்

எந்தப் பிரமியத்துக்கும்:-

நீர்ப் பூலான் வேர், பொன்னுங்கன்னி வேர், சிறுக்கீரை வேர் கழுவிப் போட்டு ஒவ்வொன்றையும் எலுமிச்சங் காயளவு அரைத்து நாலு வள்ளப் பாலில் போட்டுக் காய்ச்சி இறக்கி ஈருள்ளி சிறுக நறுக்கிப் போட்டு ஏலம், சீரகம் அரைத்துப் போட்டு துளாவி புரையிட்டு வைத்துக் கொண்டு காலமே எலுமிச்சங் காயளவு தயிர் பத்து நாள் கொள்ளவும். உப்பு, புளி விடவும். இதுவும் புது அரசன் பட்டையை துவைத்து பசுவின் பாலில் பிசைந்து வடித்து சர்க்கரையாவது, வெல்லமாவது போட்டு ஐந்து நாள் குடிக்கவும். உப்பு, புளி விடவும். எந்த பிரமியமும் தீரும்.

ஒடு விப்புருதிக்கு:-

செருப்படிச் சாறு கால் படி, பசுவின் பால் படி அரை கூட்டிக் கொடுக்கவும்.

நாலு படி காடியில் பச்சை அரிசியை இடித்துக் கூழாக் காய்ச்சி ஊர் முருங்கைத் தோலை இளைத்து ஒரு எலுமிச்சங் காயளவு போட்டுத் தொளாவி இறக்கிக் கொண்டு ஒரு நாரத்தங்காயளவு உண்ணவும். ஒடு விப்புருதி நிற்கும்.

குடல்_விப்புருதிக்கு:-

வெள்ளை வழுதலங்காயை நன்றாய் வேக வைத்து வயிற்றில் கட்டவும். சுக்கு ஒரு காசிடை பொடி பண்ணி வெந்நீரில் பிசைந்து அந்தப் பொடியை கலந்து கொடுக்கவும்.

சூரி_விப்புருதிக்கு:-

நத்தச் சூரி வேரை அரைத்து பசுவின் பாலில் குடிக்கவும். உப்புலி வேரை அரைத்து பசுவின் பாலில் குடிக்கவும். நத்தச் சூரி வேரை அரைத்து வயிற்றில் பூசவும்.

கூட்டு_விப்புருதிக்கு:-

ஆடொட்டி விதையை எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து முழுங்கவும்.

இரத்த_விப்புருதிக்கு:-

சுக்கு, வசம்பு, கடுகுரோகணி, அசமதாகம், புத்துமேல் இருக்கிற விளிம்பி வேர் பாக்களவு அரைத்து இது வெல்லாம் விளக்கெண்ணெயில் எரித்து தினம் ஒரு கரண்டி கொள்ளவும் தீரும். நற்பாலை வேரை எலுமிச்சங் காயளவு அரைத்து பசுவின் பாலில் குடிக்கவும். இந்த வேரில் நெய் கூட்டி உள்ளுக்கு கொள்ளவும்.

ஒடு_விப்புருதிக்கு:-

ஒரு படி தெனை அரிசியை வெள்ளாட்டுக் கோமயத்தில் நனைத்து மாவிடித்து கோமயத்திலே களிக் கிண்டி அந்தப் பால் வார்த்து உண்ணவும்.

கெற்ப_வுப்புருதிக்கு:-

அதின் குணம் வயறு பொருமும், சூதகமாகி வருகிற போது இடுப்பு வலி எடுத்து வரும். இரத்தம் விழுகாமல் எரிக்கும். கெற்பம் தரிக்க ஒட்டாது. மலம் இறுகிக் கழியும். இதற்கு மருந்து கடுக்காய், மஞ்சள் இந்துப்பு, வெள்வெங்காயம், வெங்காரம் இது வகை ஒன்றுக்கு விராகனிடை நாலு, ஆவரை வேர் பத்து விராகனிடை கூட்டி ஒரு டி விளக் கெண்ணெயில் வேக வைத்து கள்ளிப் பால் களஞ்சு கூட்டி வேக வைத்து தினம் ஒரு கரண்டி உள்ளுக்கு கொள்ளவும். வலி தீர்ந்து கெற்பம் தரிக்கும்.

குண்டிகை_விப்புருதிக்கு:-

நத்தச் சாரணை வேர் எலுமிச்சங் காயளவு அரைத்து வெள்ளாட்டுப் பாலில் குடிக்கவும். அரைப்படி பாலில் மூன்று நாள் குடிக்கவும். பத்தியம் வெள்ளாட்டுப் பால், முருங்கையிலை மிளகு கூட்டவும்.

மடிவாத_விப்புருதிக்கு:-

விண்ணுண்டாங் கொடி வேரை ஆறு மாதத்திய காடியில் கலந்து குடிக்கவும். வயிறு கழியும். பதினைந்து நாள் கொள்ளவும்.

விப்புருதி_புண்ணுக்கு:-

எண்ணெயில் முசுமுசுக்கையிலை, சுக்கு, வெள் வெங்காயம், வசம்பு, மிளகு இது வெல்லாம் கூட்டி அரைத்து விளக்கெண்ணெயில் இளம் பதமாக வெதும்பினவுடனே இறக்கிப் புண்ணுக்கும் பிளவைக்கும் தேய்த்துப் போடவும். எண்ணெயில் வெள் வெங்காயம், வசம்பு, செண்பகப்பூ, கடுக்காய், வெளிச்சிப் பிசின், கஸ்தூரி மஞ்சள் குங்கிலியம் மிளகு, முள்ளி மஞ்சள், சமன் கொண்டு வேப்பெண்ணெயில் கொதிக்க விட்டு உள் கொள்ளவும். பத்தியம் பசுவின் பால், வெள்ளாட்டுப் பால் வார்த்து உண்ணவும்.

எலி_கடிக்கு:-

ஈருள்ளிச் சாறு படி கால் எருமை மோர் படி கால் தவசி முருங்கைச் சாறு

படி கால் இது மூன்றும் ஒன்றாய் கலந்து கொடுக்கவும்.

மதக் காரை வேர், குமலம் பட்டை, சிறு விளக்கு மார் வேர், நன்னாரி வேர், செழுமலர், கொன்றை ஆக ஐந்தும் கத்திரி மஞ்சள் கருஞ்சீரகம், கடுக்காய், மிளகு ஆக கடைச் சரக்கு வகை நாலும் கால் படி நெய்யில் கொதிக்க வைத்து கொதித்த பிறகு இறக்கி பிள்ளையார் தகூ ஊ வைத்து கும்பிட்டு கையில் வார்த்து மூன்று தரம் உள்ளுக்கு கொள்ளவும். பத்தியம் வெள்ளாட்டுப் பால் கொள்ளவும்.

நரி விலா வேர்ப் பட்டையை பொடி செய்து நல்லெண்ணெயில் வேக வைத்து எலுமிச்சம் அளவு உள்ளுக்கு கொடுக்கவும்.

பேனாய் கடிக்கு:- 25.1.63.

அழிஞ்சல் விரையை அரைத்து பருத்திக் கொட்டை அளவு இள வெந்நீரில் குடிக்கவும். சுண்டை இலையை பறித்து வந்து துவைத்து சாறு பிழிந்து கால் படி சாற்றில் நல்லெண்ணை விட்டு எட்டு நாள் கொடுக்கவும். மாடு, ஆடு, குதிரைக்கு இரண்டு படி நீர் மோரில் கொடுக்கவும்.

மாவிலிங்கம் பட்டையை அரைத்து எண்ணெயில் வேக வைத்து பாக்களவு குடிக்கவும் விஷகடி முதலானதும் தீரும்.

மச நாய் கடிக்கு:-

பருத்தியிலை பறித்த இடத்தில் ஒரு இலையை முக்குட்டுத் தடத்தில் போட்டு மற்ற இலையை களச்சிக்காய் மாத்திரம் அரைத்து பசுவின் வெண்ணெயில் இரண்டும் கூட்டிக் குழப்பி முழுங்கவும். வெய்யிலில் இருக்கவும். வாந்திக்கு இப்படி மூன்று நாள் முழுங்கவும். உப்பு, புளி விடவும்.

மலசலம் அடைத்தால்:-

குருவை அரிசி, தினை அரிசி, கம்பரிசி மூன்றும் சமன் கொண்டு பசுவின் மோரில் வேக வைத்துக் கொதித்து இறக்கும் போது மலை எருக்கலை எலுமிச்சங் காயளவு அரைத்துப் போட்டுத் துளாவி சோறாக்கி மூன்றாம் நாள் பசுவின் நெய் குத்தித் தின்னவும். செம்பையிலையை துவைத்து காடியில் பிசைந்து வடித்து அரைப்படி குடித்து முதுகு காலெங்கும் திமிர மிட்டு வெய்யிலில் இருக்கவும். வயிர் கழிந்து சலம் விடும். பிறகு குளிர்ந்த தண்ணீரில் முழுகவும்.

புங்கந் துளிர் உப்பும் அரைத்து குண்டு மணி அளவு முழுங்கவும். தேற்றான் விரையை பால் விட்டு அரைத்து சிற்றாமணக்கெண்ணெயில் முழுங்கவும். மலம் சலம் விடும்.

வெங்காரம் அரைக் களஞ்சு பொரித்து நெருஞ்சி வேர் மூன்று மஞ்சள் இரண்டு வெள்ளைக் கோழிக் காரம் இது வெல்லாம் ஒரு படி தண்ணீரில் கரைத்துக் கொடுக்கவும். மலம் சலம் விடும். சாறு வார்த்துக் கொள்ளவும். கழுதை லத்தியை பசுவின் பாலில் பிசைந்து மூன்று நாள் கொடுக்கவும். தழுதலைச் சாறு, தகரை யிலைச் சாறு பொடுதலைச் சாறு இது மூன்றும் ஒரு படி நல்லெண்ணெய் அரைப்படி கடுகு பலம் அரை வெள்ளைப் பூண்டு பலம் அரை இது வெல்லாம் எண்ணெயில் வேக வைத்து நேரம் ஒரு காசிடை கொள்ளவும். புளியிலை திருயிலை இது இரண்டும் துவளையிடவும்.

பிள்ளை பெறமாட்டதற்கு மருந்து.-

மூன்று நான்கு நாள் சென்றால் சுக்குச் சாறு, மிளகு சாறு எள்ச் சாறு ஏலச் சாறு வெள்ளைப் பூண்டுச் சாறு வகைக்கு ஒரு கரண்டி முருங்கையிலைச் சாறு இது வெல்லாம் ஒன்றாய்க் கலந்து குடிக்கவும். வயிற்றில் இறந்த பிள்ளை விழும். ஏலமும் மாம்பட்டையும் அரைத்துக் காடியில் குடிக்கவும். முயல் புழுக்கையைத் தண்ணீரில் அரைத்து இள வயிற்றில் இறங்கத் தடவ பிள்ளை விழும்.

மாசு விழாதிருந்தால்:-

கொள்ளுச் சாறு, குமுட்டிச் சாறு, காய்ச்சிக் குடிக்கவும்.

வயிற்றில் சீ கட்டிச் சுரம் வந்தால்:-

பரு மணலில் வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக் காய்ச்சிக் குடிக்கவும். மாசு விழாததற்கு குதிரை லத்தி ஐந்து லத்தி எடுத்து வந்து காடியில் பிசைந்து இருத்துக் கொடுக்கவும். செண்பக விரையை வெள்ளாட்டுப பாலில் அரைத்துக் கொடுக்கவும் மாசு விழும்.

வாய்வு குத்துக்கு:-

கனி தும்பை இலை, வேலிப் பருத்தி, இலை சுக்கு, வெள்ளைப் பூண்டு சதம்ப்பை நேக அரைத்துக் கொதிக்க விட்டுப் பூசத் தீரும்.

பிள்ளை பெறக் குளிசம்:-

பேய்ப் பீர்க்கன் வேரை ஞாயிற்றுக் கிழமை பிடுங்கிக் குளிச மாடி தூ ப தீபங் கொடுத்து யோனி எதிராக காட்டவும் பிள்ளை பிறக்கும். பின்பு குளிசத்தை எடுத்து கூரை மேல் வைத்துச் சற்று நேரம் இருக்க விட்டு எடுத்துக் கொள்ளவும்.

இதுவும் வுதலை வேரை பிடுங்கிப் பிளந்து வயிற்றின் கீழ் தடவி வாசலில் தலைகீழாய்க் கட்டவும் பிள்ளை பிறந்த மாசு விழுந்து பிறகு வாங்கிப் போடவும்.

பிள்ளை பெறக் குளிசம்:-

சித்தா மணக்கு வேரைக் குளிச மாடி காதில் கட்ட பிள்ளை பிறக்கும். தேரடியில் பொங்கலிட்டு வேரைப் பிடுங்கி வைத்திருக்கவும். வெள்ளிக் கிழமை, செவ்வாய்க் கிழமை இந்தப் படி எடுத்து வைத்திருக்கவும். பிறக்காமல் விசனப்படும் போது அந்த வேரைப் பிளந்து யோனி முகத்தில் காட்ட பிறக்கும்.

வாய்வுக்கு வெதுப்பு:-

களச்சியிலை, எருக்கிலை, பழுப்ப தருஞ்சியிலை, முடக்கத்தானிலை, வேலிப் பருத்தி இலை, ஊர் சுத்தி எடுத்து வந்து நன்றாய் இடித்து ஓட்டைக் காய வைத்து நன்றாய்க் கருக்கி சீலை பொட்டணம் கட்டி வாய்வு குத்தின இடத்தில் நன்றாய்ப் பிடிக்கவும்.

கழுதை வண்டு தின்றவர்க்குப் பச்சை நாவி தின்றவர்க்கும்:-

ஊமன் கொழுந்தை அரைத்து வெல்லம் கூட்டி முழுங்கவும். ஊமன் இலையைப் பறித்து வந்து துவைத்து சாறு பிழிந்து குடிக்கவும். எருக்கிலை பால் குடித்தால் ஆவரை இலையைத் துவைத்துத் தண்ணீரில் பிசைந்து வடித்துக் குடிக்கவும். நீர்ப் பூலான் கொழுந்து துவைத்து காடியில் பிசைந்து மூன்று நாள் குடிக்கவும். வேப்பிலை மிளகு துவைத்துத் தண்ணீரில் குடிக்கவும்.

பிள்ளை பிறக்க:-

வில்வ மரத்து மேற் புல்லுருவி தூ ப தீபங் கொடுத்து எடுத்து வைத்திருந்தால் உரைத்துக் குடிக்க உடனே வயிற்றில் செத்த பிள்ளை உள்பட விசனப் படாமல் விழும்.

கனி தும்பை வேர் பிடுங்கி வந்து நடு வீட்டில் போட பிள்ளை பெறுவாள். சங்கன கொழுந்தை அரைத்து நல்லெண்ணெயில் குழைத்து முழுங்க பிள்ளை பெறுவாள். வெள்ளைக் குன்றி வேர் குளிச மாடி காலுக்குக் கீழே போட பிள்ளை பிறக்கும். முயல் புழுக்கையை அரைத்து அடி வயிற்றில் தடவ இறந்த பிள்ளை விழும். ~~பித்தை~~ பிள்ளை பிறந்தவுடனே கழுவிப் போடவும். அப்படிக் கழுவிப் போடாவிட்டால் விதனம் பண்ணும். அது அறிந்து ~~கழுவிப்~~ கழுவிப் போடவும்.

பருத்தி வேர் வடக்கே போகிறதைப் பிடுங்கி வந்து பெருத்த பாகங் காட்டினால் பிள்ளை விழும். சிறு பாகங் காட்டினால் விழுகாது. அது அறியவும். முருக்கிலையை துவைத்துக் காடியில் பிசைந்து வெல்ல மிட்டுக் கொடுக்கவும் மாசு விழும்.

உஷ்ணம் எரிவுக்கு:-

பச்சரிசியை அரைத்துப் பசுவின் பாலில் குடிக்கவும். செருப்படி வேர் அரைத்து பசுவின் பாலில் குடிக்கவும். உடம்பு எரிவு போம்.

இந்திரிய நஷ்டம்:-

முருக்கிலையும் ஒரு முழச் சுரைக் கொழுந்து நீர்ப்பூலான் கொழுந்து ஒரு பிடி துவைச்சு புதுப் பானையில் போட்டுத் தண்ணீர் விட்டு பனை வெல்லம் நாலு உடைத்துப் போட்டு விடியும் அளவு வைத்து அந்தத் தெளிவு காலமே கால் படி இருத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொள்ளவும். உப்ப, புளி விடவும்.

சர்வ நஞ்சுக்கும் மருந்து:-

கோவையிலைச் சாறுந் தயிர்த் தண்ணீரும் கூட்டிக் கொடுக்கவும். பச்சைப் பயிறு அரைப்ப நன்று இடித்து தண்ணீர் மட்டாய்க் கலந்து ஒரு நாளிகை இருக்க விட்டு நனைந்த வுடனே எலுமிச்சம் பழச் சாற்றில் குடிக்கவும். நஞ்சு எடுக்கும். எருக்கிலை சுட்ட கரியை தண்ணீரில் கலந்து குடிக்கவும். குப்ப மேனி இலையை காடியில் பிசைந்து குடிக்கவும். எந்த நஞ்சும் எடுக்கும். கை கண்டது.

பதினெட்டு வகை நஞ்சுக்கும் மருந்து:-

மதுக்காரைப் பழத்தை அரைத்து உருண்டை பண்ணி நிழலில் உலர வைத்து மறுபடி சிறுநீரில் அரைத்து உருண்டை புண்ணி எந்த நஞ்சுக்கும் சிறு நீரில் உரைத்துக் கொடுக்கவும்.

மிடறுக்கு மருந்து:-

அரத்தை, திப்பிலி, சுக்கு, கடுக்காய், ஆடாதோடைக் கொழுந்து ஒரு மடி இருபத்தொரு மிளகு தேற்றும் பழம் இது வெல்லாம் அரைத்து கூட்டி தேனில் கொள்ளவும். கம்பு தவுடு பனியில் நனைய வைத்து மாகாணிப் படி கடுக்காய் பொடியும் ஐந்து விராகனிடை மிளகு பொடியும் கூட நனைய வைத்துக் கால் மண்டலம் கொள்ள மிடறு நன்றாய் விடும்.

செவ்வட்டை கடி, காணக் கடி பல வண்டு கடிக்கும்:-

செருப்படி இலையை எலுமிச்சங் காய் அளவு அரைத்து ஒரு சேரை மிளகு பொடி ஒரு சேரை வெள்ளைப் பூண்டு முளையை வாங்கி விட்டு பசுவின் நெய்யில் வேக வைத்துக் கொண்டு மூன்று நேரங் கொள்ளவும். இரண்டு நேரம் வெந்நீர் வார்த்துக் கொள்ளவும். உப்பு புளி விடவும்.

இதுவும் ஞாயிற்றுக் கிழமை நாள் மூன்று நாளைக்கு குறுவை அரிசி வெள்ளாட்டுப் பால் விட்டுப் பொங்குகிற போது கொடி வேலி வேர் ஒரு எலுமிச்சங் காயளவு கூட அரைத்துப போட்டுக் கலக்கிப் பொங்கி மூன்று நாள் உண்ண எல்லா விஷமுந் தீரும். பூத்தியம் பாலும் சோறும்.

ஐவிரலி இலையைக் கசக்கக் கருகசி வண்டு கடியில் போடவும். பிராம்பட்டையை நறுக்கி நன்றாய்த் தட்டி குறுவை அரிசியைக் குளக் கட்டை வைத்து தினம் மூன்று தரம் தின்னவும். இப்படி ஐந்து நாள் தின்னவும்.

செவ்வட்டைக் கடிக்கு:-

கருவேலாம் பட்டையைத் துவைத்துத் தாளியிலை விட்டு வேக வைத்து கட்டிலின் கீழே தாளியை வைத்து மேலே இருந்து ஆவி பிடிக்கவும் தீரும். படு தாமரை தழுதாழை நீர் மேல் நெருப்பை உலர்த்திச் சூரணம் பண்ணி அரைப்படி குறுவை நெல்லரிசியை வேக வைத்து அந்தச் சோறு சமைந்து வருகையில் ஒன்றரை விராகனிடை சூரணம் போட்டுக் கிளறி எருமைத் தயிர் வார்த்து அசனம் பண்ணவும். எட்டு நாள் குளியாமல் காத்துப படாமல் இருக்கவும்.

நீர் வண்டு கடிக்கு:-

கூனைப்பு ஊர் சுத்தி எருவை ஒரு தூ த்துக் கூடை பொறுக்கி வந்து ஒரு தாளியில் நெருப்பிட்டு மேலே எருவை அடுக்கி பெரிய கலயத்திலே நிறைய நீர் விட்டு தாளி புடைக்கு

மூன்று தமுருட்டு வட்டிலில் மேல் வைத்து ஐந்து நாளிகை இருக்க விட்டு வட்டிலை எடுத்து நீரை உலர்த்திப் போட்டு வட்டி அடியில் பார்த்தால் தயிலம் சேறு போலே இருக்கும். அதை வழித்து நீர் வண்டு கடிக்குப் பூசவும்.

கண்டா_மாலைக்கு:-

தண்ணி மிட்டான் கிழங்கு ஆதித்த வார நாள் கொண்டு வந்து உள் நரம்ப மேல் தோலும் வாங்கி விட்டு எள்ளெண்ணெயைத் தரையிலே வைக்காமல் அடுப்பிலே வைத்து அந்த தண்ணியிலே கிழங்கைப் போட்டுக் காய்ச்சி பாதி எண்ணெயை விட்டு அசனத்துககு வாத்தி உண்ணவும். தலை முழுகவும்.

பாதி எண்ணெயிலே வசம்பு மஞ்சள் ஒரு கட்டைப் புண்டு இது வெல்லாம் நறுக்கிப் போட்டுக் காய்ச்சி புண்ணின் மேல் பஞ்சு போடவும். பத்தியம் பசுவின் பால் துவரைப் பருப்பு.

வீக்கத்துக்கு:-

முக்குருந்தம் பட்டையையும் நஞ்சுண்டாம் பட்டையும் கூடப் போட்டு அரைத்துக் கழு நீரில் கரைத்து உள்ளுக்கு கொடுத்து மேலுக்குத் தடவவும்.

இதுவம் கண்டாமாலைக்கு:-

கள்ளிக் கரி, எருக்கிலைக் கரி, ஊமத்தன் கரி, கீரைத் தண்டுக் கரி, நாயுருவிக் கரி இவை சமன் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்துப் புண்ணில் பூசவும். வாழைப் பூவை உலர்த்தி செங்கீரைக் கோல், கள்ளி, நாயுருவி இவை சமூலமும் உலர்த்தி ஆயக் கொழுந்து இது வெல்லாம் உலர்த்தி வெவ்வேறே ஓட்டில் சுட்டு கரியாக்கிப் பொடி செய்து ஒன்றாகக் கூட்டிச் சாம்பல் தெளிய வைத்து கண்டாமாலைக்கும் புதன் களலைக்கும் சாம்பலுடனே உவர் மண் கூரிய சுண்ணாம்பு இது மூன்றும் கூட்டி தேனிற் கூட்டி வீக்கத்துக்கு இட்டுத் தடவி மூனாம் நாள் மருந்தை வாங்கிப் போட ஆணி விழும். விழுந்த பின்பு விளக்கெண்ணெய் பஞ்சு போடவும். அந்தக் கருக்குப் பொடி போடவும். புண் ஆறும்.

குடி_மருந்து:-

வட்டச் சீத்தை வேரும், வேலாம் பட்டை வேரும் கூட அரைத்து காராட்டுப் பாலில் குடிக்கவும். இதை உலர்த்திப் பொடி செய்து கொள்ளவும். வேலியணஞ்சான் சாறு பிளிந்து, நல்லெண்ணெய் சமன் கூட்டி அமாவாசை துவக்கி மூன்று நாள் பௌர்ணமி துவக்கி மூன்று நாள் குடிக்கவும். இப்படி மூன்று முறை குடிக்கவும். நீர் மேல் நெருப்பு வேரை அரைத்து பசுவின் பாலில் குடிக்கவும். வட்டச் சீத்தை வேரை அரைத்துப் பூசவும். நரிவிளா. வேர் ஆகாசக் கருடன் கிழங்கு வெள்ளருகு சமூலம் அரைத்து பசுவின் பாலில் குடிக்கவும். புண்ணுக்குக் கள்ளல் பால் தடவி சீலையிலொட்டிப் போடத் தீரும்.

சன்னி_பயித்தியத்துக்கு:-

புளி இறகு ஒரு பிடி, வேப்பிறகு ஒரு பிடி, நரிப் பயத்தான் கொடி ஒரு பிடி, முசுமுசுக்கை ஒரு பிடி சமனுகக் கூட்டி நாலு படி தண்ணீர் விட்டு நான்கையும் ஒன்றாய்க் காய்ச்சிக் குடிக்கச் சன்னி, பயித்தியம் வாய்வு, பித்தக், களை, உஷ்ணம் இது வெல்லாம் தீரும். கை கண்டது.

லேபனத்துக்கு:-.

நொச்சிச் சாறு, ஊமத்தன் சாறு இது இரண்டையும் வெள்ளைச் சீலையில் நனைத்துத் திரியாக்கி நல்லெண்ணெயில் விளக்கேற்றி மை பற்றி விளக்கெரித்து மை எடுத்துத் தண்டில் பூசிப் புணர வேண்டியது எல்லாம் தருவாள்.

கடிக்_சிரங்குக்கு:-

புங்கன் வேர் ஒரு பங்கு நிலை ஆவாரை வேர் இரண்டு பங்கு சித்திர மூலம் வேர்

இரண்டு பங்கு இது மூன்றும் உலர்த்தித் தூள் பண்ணி தினம் ஒரு வெரு கடிப் பிரமாணம் குருவை, நெல்லரிசியில் போட்டு அரைத்து உருட்டி சுட்டுத் தின்னவும். இதுவும் நிலை ஆவரை வேர், மூன்று வேர் செவ்வாய்க் கிழமை நாள் பிடுங்கி வந்து கழுவிப் பட்டை தட்டி அம்மியில் நேக அரைத்து பசுவின் வெண்ணெயில் முள்ளி மாத்திரை எடுத்து அந்த மருந்தை நன்றாய்க் குழப்பி மூன்று பங்கிட்டு முழுங்கவும். மற்றதை எடுத்து மேலுக்குப் பூசிக் குரு நீர் விட்டுக் கொள்ளவும். சிரங்கு என்றைக்கும் வராது.

பல் குடைச்சலுக்கு மருந்து :-

நல்ல வேளைவேர் ஒரு கட்டைப் பூண்டும் முளை வாங்கி விட்டு வசம்பு இது மூன்றும் நறுக்கி நல்லெண்ணெயில் குழைத்து பல் குடஞ்ச விடத்தில் அடக்கிக் கொள்ளவும். தேங்காய், வெள்வேலாம் பட்டை, நாயுருவி வேரும் அரைத்துக் கொதிப்பித்து பல்லடியில் ஒத்திடவும்.

கண்டா மாலை விப்புருதிக்கு மருந்து :-

வேம்பாடம் பட்டை இரண்டு பணவிடை, வெங்காரம் ஒரு பணவிடை, துத்தம் ஒரு பணவிடை, இரசம் ஒரு பணவிடை, வெள்ளைக் குங்கிலியம் ஒரு பணவிடை, செண்பகப்பூ ஒரு பணவிடை, லவங்கப் பட்டை ஒரு பணவிடை காசுக் கட்டி மூன்று பணவிடை, கோஷ்டம் மூன்று பணவிடை, கல்நார் மூன்று பணவிடை, கடுக்காய், வலம்புரிக்காய் இரண்டு பணவிடை செவ்வள்ளிக் கொடி நான்கு பணவிடை, அரத்தை மூன்று பணவிடை, திப்பிலி மூன்று பணவிடை, எண்ணெய் படி முக்கால் இவை எல்லாம் கூட்டி எரித்து கடுகு பதத்தில் வடித்து பஞ்சிற்றோய்த்து புண்ணில் போடவும். இதற்கு கண்டா மாலை, விப்புருதி, பிளவை, அரையாப்பு முதலான்தும் தீரும்.

குட்டத்துக்கு :-

சதுரக் கள்ளி கொண்டு வந்து கண்டங் கண்டமாய் நறுக்கி ஒரு பானையிலிட்டுச் சீலை வேடு கட்டி குருவை அரிசி மாவு பண்ணி அதிலே வேக வைத்து எடுத்துக் கொண்டு நெய் வார்த்துத் தின்னவும். அமாவாசை மூன்று நாள் தொடுத்து பதிமூன்று நாள் தின்னவும். வெள்ளரிக்காய், பெரும் பூசனிக்காய் மூன்று வருஷத்துக்காகாது. பிறகு கூட்டிக் கொள்ளலாம்.

வண்டு கடியில் குட்ட மானதற்கு :-

தேங்காய் அளவு எருமைச் சாணமும், சிறு நாரத்தங்காயளவு சுண்ணாம்பு உவர் மண் ஒரு பிடி ஒரு பானையில் போட்டுக் காய்ச்சிக் கொதிக்க வைத்து அந்தி பகல் அந்த வியாதிக்காரனை எவ்விடத்தில் புண் உண்டோ அவ்விடத்தில் நாலு நாள் பூசவும். உப்பு, புளி விடவும்.

வயிற்றுக் கடுப்புக்கும் எலும்பு உருச்சிக்கும் :-

1- ஆவாரங் கொழுந்து, கடுக்காய், உப்பு சமனாக அரைத்து எருமைத் தயிரில் கொள்ளவும். கீழா நெல்லி சமூலம், விஷ்ணு கிராந்தி சமூலம், தவசி முருங்கையிலை எல்லாம் சமனாக அரைத்துப் பச்சைக் பாக்களவு எருமைத் தயிரில் குழைத்து முழுங்கவும்.

2. ஆவரஞ் சாறு ஆவாரங் கொழுந்து கலங் கொம்பு உரைத்து உள்ளுக்குக் கொள்ளவும்.

சிரங்குக்கு மருந்து :-

கார்போக அரிசி, கத்திரி மஞ்சள், நெல்லிக்காய், கெந்தகம் இம் மூன்றும் பொடி செய்து கால்படி தண்ணீரில் ஊற விட்டு காலமே இறுத்து உள் கொள்ளவும். பிறகு அந்த மருந்தில் நல்லெண்ணெயிட்டுக் குழைத்து மேலுக்குப் பசவும். பிறகு இலுப்பைப் புண்ணாக்காவது எருமை சாணியாவது மேலுக்குப் பூசி குளிர்ந்த தண்ணீரில் முழுகவும்.

****

310